..stered No. M. 2330 'SIDDHANTHAM'
Vol. 29—No. 5

சித்தாந்தம்

சைவசித்தாந்த மகாசமாஜத் திங்கள் வெளியீடு

'தன்க டன்னடி யேனையுந் தாங்குதல்
என்க டன்பணி செய்து கிடப்பதே'

..லர் 29 | துன்முகி வைகாசி 1956 மே | இதழ் 5

உள்ளுறை — பக்கம்

..த்திராசிரியர் : C. M. இராமச்சந்திரன் செட்டியார், பி.ஏ., பி.எல்.
உதவிப் பத்திராசிரியர் : புலவர் - முருகவேள், பி.ஓ.எல்.

சைவ சித்தாந்த மகா சமாஜம்
10, மான்டித் ரோட், எழும்பூர், சென்னை-8
ஆண்டுச் சந்தா ரூபா 3 தனிப்பிரதி அணு 4

செய்தித் திரட்டு

நடந்தவை

7, 8—4—56. தூத்துக்குடிச் சைவ சித்தாந்த சபையின் 72-ஆம் ஆண்டு நிறைவுவிழா, திரு. மயிலை. பாலசுப்பிரமணிய முதலியார் B. A., B. L. அவர்களின் தலைமையிற் சிறப்புற நடைபெற்றது.

9—4—56. தூத்துக்குடிப் பாகம்பிரியாள் மாதர்சங்கத்தின் ஆண்டுவிழா பெருஞ் சிறப்புடன் நடைபெற்றது.

17—4—56 முதல் 24—4—56வரை கோவை மாரியம்மன் உற்சவவிழா, எல்லா நாட்களிலும் அறிஞர்கள் பலரின் சொற்பொழிவுகள் நடைபெற்றன.

20, 21, 22—4—56. ஈரோடு தொண்டீசுவரர் ஆலயத்தில் அருள்நெறித் திருக்கூட்டம், திருமுறை மாநாடு, சைவ மாதர் மாநாடு, திருக்குறள் மாநாடுகள் நடைபெற்றன. மதுரைத் திருஞானசம்பந்தர் ஆதீனம் சிவப்பெருந்திரு. சோமசுந்தரதேசிக சுவாமிகள் தலைமை தாங்கினார்கள். அறிஞர்கள் பலர் சொற்பெருக்கு ஆற்றினார்கள்.

21—4—56 கோவைச் சமரச சன்மார்க்க மாநாடு, ஆசிரியர் இளவழகனார் அவர்களின் தலைமையில் நிகழ்ந்தது.

22—4—56. கோவையில் சேக்கிழார் திருவிழா, மதுரை ஆதீனம் சிவப்பெருந்திரு. சோமசுந்தர தேசிக சுவாமிகள் தலைமை; சொற்பொழிவுகளும், பட்டி மண்டபமும் நடைபெற்றன.

29—4—56. கோவை-கல்யாண மண்டபத்தில் இளங்கோவடிகள் விழா; அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தின் தமிழ் ஆராய்ச்சித் துறைத் தலைவர் G. சுப்பிரமணியம் பிள்ளை M. A., B. L. அவர்கள் தலைமை தாங்கினார்கள்.

நடப்பவை

7, 8—5—56. திருப்புகலூர், திருச்செங்காட்டங்குடி விழாக்கள்; பல அறிஞர்கள் விரிவுரை செய்வார்கள்.

16—5—56. பழனிச் சைவசித்தாந்த சபையின் ஆண்டுவிழா, பல அறிஞர்கள் பேசுவார்கள்.

27, 28—5—56. திருநாவலூர் சுந்தரர் செந்தமிழ்க் கழகத்தின் 13-ம் ஆண்டுவிழா; சித்தாந்த சிகாமணி-க. வச்சிரவேல் முதலியார் B.A., L.T. அவர்கள் தலைமை தாங்குவார்கள். புலவர் முருகவேள், தி. கி. நாராயணசாமி நாயுடு முதலிய பலர் கலந்துகொள்ள இருக்கின்றனர். இரண்டாம் நாட் கூட்டம், நமது சைவ சித்தாந்த மகா சமாஜத்தின் மாதாந்தரக் கூட்டமாக நடைபெறும்.

Regd. M. 2330

உ
சிவமயம்

சித்தாந்தம்

ஆனைமுகன் ஆறுமுகன் அம்பிகைபோன் னம்பலவன்
ஞானகுரு வாணியைஉள் நாடு

மலர் 29 | துன்முகி வைகாசி 1956 மே | இதழ் 5

தெய்வம் மணக்கும் பாடல்

சொற்பொழிவின் சுருக்கம்—ஆசிரியர்

சொல்லும் பொருளும் கொண்டது மொழி. (வாக்கு+அர்த்தம்=வாகர்த்தம்—காளிதாசர்) மொழியில் பொலிவது பாடல். சொல்லமைதியும் பொருளமைதியும் ஒருங்கே மிளிர்வது செவ்விய பாடல். சொல்லமைதி இசைக்கு அடிப்படை. பொருளமைதி அறிவிற்கு அடிப்படை. இசையிலும் இன்னிசை ஒருவனுடைய உள்ளத்தை எழுப்பிவிடும். அறிவிலும் அறிவாற்றல் ஒருவனுடைய உயிர் வளர்ச்சியை எழுப்பிவிடும். ஒருவனுடைய உள்ளப்பாங்கை எழுப்பி உயிர் வளர்ச்சியைப் பொலிவு பெறச் செய்வது சொல்லமைதியும் பொருளமைதியும் இணைந்த செவ்விய பாடலாகும். அத்தன்மைத்தாகிய செவ்விய பாடலே திவ்விய பாடலாகும். அதுவே தெய்வப் பாடல். ஏனெனில் தெய்வம் நமக்கு உதவுவது உயிரின் முன்னேற்றம். அதையே இசையும் அறிவும் செறிந்த பாடல் செய்கிறது. அதற்கு அடிப்படையாக உள்ளதே சொல்லும் பொருளும் அடங்கிய பாடல். ஆகவே அவ்வகைப் பாடல் தெய்வம் மணக்கும் பாடல் ஆகும் அல்லவா?

தமிழில் கணக்கற்ற பாடல்கள் உண்டு. அவைகளைக் கணக்கற்ற புலவர்கள் பாடியிருக்கிறார்கள். அவைகள் எல்லாம் தெய்வம் மணக்கும் பாடல் ஆகுமா? சொல்

லமைதியும் பொருளமைதியும் எடுத்துக் கொண்ட பாடல்களில் உண்டா என்று ஆராய்ந்து, அவைகளால் உயிர்களுக்கு ஏதாவது முன்னேற்றம் ஏற்படுமா என்று கூர்ந்து நோக்கினால், அது ஏற்படும் என்று கண்டால் அப்பாடல்கள் தெய்வம் மணக்கும் பாடல் ஆகும். இல்லாவிடின் தெய்வம் மணக்காப் பதர்கள் எனலாம். பதினொரு நூற்றாண்டுகளின் முன் சுந்தரமூர்த்திகள் இதனை நினைந்தார் போலும். நன்றாக ஆராய்ந்து ஒரு முடிவிற்கும் வந்தார் போலும். மனிதரைப் பாடும் பாடல் இம்மைக்கும் மறுமைக்கும் உதவா. இறைவனைப் பாடும் பாடலே இரண்டிற்கும் உதவுவதன்றி நம்மைச் சைவ உலகிற்கு ஏற்றி நம்மை அத்திவ்விய அரசியலில் நிறுத்தும் என்றார். அவ்வடியார் திருப்புகலூருக்குச் சென்று இறைவனை வழிபட்டபோது "புலவர்களே, நீங்கள் ஏன் ஒரு துரும்புக்கும் உதவாத பொய்ம்மையாளராகிய மனிதர்களைப் பாடி வாயை வருத்திக் கொள்ளுகிறீர்கள். இதோ புகலூரில் இறைவன் இருக்கிறான். இவனைப் பாடுங்கள். இவன் இந்தப் பிறவியில் சோறும் உடையும் தருவான்; மறுமையில் சிவலோக ஆட்சியையும் தருவான்" என்கிறார். அதுதான்,

"தம்மையே புகழ்ந்து இச்சை பேசினும்
சார்வினும் தொண்டர்தருகிலாப்
பொய்ம்மை யாளரைப் பாடாதே எந்தை
புகலூர் பாடுமின் புலவீர்காள்,
இம்மையேதரும் சோறும் கூறையும்
ஏத்தலாம் இடர் கெடலுமாம்
அம்மையே சிவலோகம் ஆள்வதற்கு
யாதும்ஐயுற வில்லையே"

என்ற திவ்விய பாசுரம். ஆகவே சுந்தரர் கருத்தின்படி மனிதரைப் பாடும் பாடல் ஒருக்காலும் தெய்வம் மணக்கும் பாடல் ஆகாது; இறைவனைப் பாடும் பாடலே தெய்வம் மணக்கும் பாடல் ஆகும் என்க.

இனி உலகத்தையும் அது கொடுக்கும் பொருள்களையுமே நம்பித் திரியும் மக்கள் உலகியல் மக்கள் ஆவர். இறைவனையே நம்பி அவன் பணியிலேயே ஈடுபடுபவர் தெய்வீக மனிதர் ஆவர். ஆகவே இறைவனை உணர்த்தும்போது

இறைவனுடைய உண்மை அடியார்களையும் இணைத்துக் கூறலாம் அல்லவா? இறைவனைப் பாடிப் புகழும்போது இறைவனின் உண்மை அடியார்களையும் பாடிப் புகழலாமே. எப்படியெனில் சிவஞானபோதம் பன்னிரண்டாம் சூத்திரத்தில்,

> " அன்பரொடு மரீஇ
> மாலற நேயம் மலிந்தவர்
> வேடமும்.........ஆலயந் தானும் அரனெனத் தொழுமே"

என்று கூறின வகையில், இறைவனுடைய மெய்யடியார்கள் இறைவனைப்போலவே தொழுவதற்கு உரித்தானவர்கள் அல்லவா?

இதை எண்ணித்தான் சேக்கிழார் அடிகள் இறைவனை வழிபடும் முறையில் இறைவன் அடியார்களான அறுபத்து மூவரையும் தொகையடியார்களையும் பாடினர் போலும். இறைவனை நேரில் புகழும் பெருமை பெற்ற தேவாராதி ஒன்பது திருமுறைகளும் தெய்வம் கமழும் செய்யுள்களாக அதுவரை இருந்தன. அதற்குப் பிறகு இறைவன் அடியார்களாகிய நாயன்மார்களைப் பாடிய 11, 12 திருமுறைகளும் தெய்வம் கமழும் பாடல்கள் ஆயின. ஆகவே தெய்வ அருட்பாக்கள் ஆன முதல் பத்துத் திருமுறைகளோடு அடியார்களாகிய மக்களைப் பாடிய 11 திருமுறைப் பகுதிகளும் 12 திருமுறையும் சேர்க்கப்பட்டுத் தெய்வம் மணக்கும் பாடல்கள் ஆயின. இது ஒரு அதிசயமான மாறுதல் அல்லவா?

எல்லா மொழிகளிலும் எல்லாச் சமயங்களிலும் தெய்வத்தைத் தொழும் பாடல்கள் தனியாகப் புனிதப் பாடல்களாக வகுக்கப்பட்டுப் போற்றப்படுகின்றன. மக்களையும் மக்கள் புகழ்களையும் கூறும் பாடல்கள் உலகியல் நூல்களாகப் பிரிவினை செய்யப்படும். (பதி நூல் என்றும் பசு நூல் என்றும் வகுக்கப்படும்.) அப்படி வெகுகாலம் எண்ணப்போக்கு சென்றுகொண்டிருக்க, ஒரு காலத்தில் மக்களிலும் பெரியார்களைத் தெய்வீகப் பிறவிகளாக உணரும் காலமும் வந்தது. அப்போது அப்படிப்பட்ட சிறந்த மக்களுக்குத் தெய்வீகத்தன்மை அளிப்பதும் உண்டு.

அச்செயல் ஏனைய சமயங்களிலும் உண்டு ; சைவத்திலும் வந்தது ; வைணவத்திலும் அதனைக் காண்கின்றோம்.

ஏழு எட்டாவது நூற்றாண்டுகளில் சைவ வைணவப் பெரியார்கள் உலகில் தோன்றி அச்சமயங்களைப் பெருக்கினார்கள். அவ்வாறு சமயப் பரப்பும் தூய்மைப் பிரசாரமும் ஏற்பட்ட காலத்தில் அப்பெரியார்கள் அருளின பாடல்கள் போற்றப்பட்டன. அப்பாடல்கள் இறைவனைப் பற்றியே இருந்த அளவில், அவைகள் அருட்பாக்கள் அல்லது தெய்வப் பாக்கள் ஆயின. பிறகு 9, 10 நூற்றாண்டுகளில் சோழப் பேரரசு தலைசிறந்து வளர்ந்தோங்கியது. சோழ மன்னர்கள் சமயங்களை மிகவும் போற்றினார்கள். பெரிய கோயில்களைக் கட்டிச் சமயங்களில் பேரன்பு பூண்டிருந்தார்கள். அப்போது மன்னர்கள் அருட்பாடல்களைப் போற்றினதோடு, அப்பாடல்களை அருளிச் செய்த அடியார்களையும் வணங்கினார்கள். ஆலயங்களில் அதுவரை தெய்வ உருவங்களையே வைத்துப் போற்றி வந்திருந்தார்கள். ஆனால் 10 நூற்றாண்டு முதல் அடியார்களின் திருவுருவங்களையும் ஆலயங்களில் தாபித்து வணங்கினார்கள். அன்னார் பாடல்களை ஓதுவதற்காக ஏற்பாடும் செய்தார்கள். இந்த முறையில் அடியார்கள் தெய்வீக மக்களாகக் கருதப்பட்டார்கள்.

இனி 12-ம் நூற்றாண்டில் சேக்கிழார் தோன்றித் திருத்தொண்டர் புராணம் என்ற அடியார் திருப்புகழ் கூறும் நூலைப் பாடியருளினார். அதற்கு முன் நம்பியாண்டார் நம்பிகள் பதினோராம் திருமுறையில் சில புகழ்ப் பிரபந்தங்களைச் சேர்த்திருந்தார். அதை ஒட்டிச் சேக்கிழார் அடிகள் தமது திருத்தொண்டர் புராணம் ஆகிய அடியார் வரலாற்று நூலையும் 12-ம் திருமுறையாகச் சேர்த்தினார். அதனை அரசியலும் சைவ உலகமும் ஆதரித்தது. ஆகவே தெய்வ மக்களைப் பாடும் பாடல் தெய்வம் மணக்கும் பாடல் ஆயிற்று.

இதனைக் கருத்தில் கொண்டுதானோ என்னவோ சேக்கிழாருக்குப் பிள்ளைத் தமிழ் பாடிய மகா வித்துவான் பிள்ளையவர்கள் அவரது பாடல்களைத் தெய்வம் மணக்கும் செய்யுள் என்றார் போலும். சேக்கிழார் பிள்ளைத் தமிழில் இச் செய்யுளைப் பாருங்கள்.

"சோறு மணக்கும் மடங்களெலாம்
தூய்மை மணக்கும் சிந்தையெலாம்
சுவணம் மணக்கும் ஆடையெலாம்
தொங்கல் மணக்கும் தோள்களெலாம்
சேறு மணக்கும் கழனியெலாம்
செல்வம் மணக்கும் மாடமெலாம்
தென்றல் மணக்கும் மேடையெலாம்
தெய்வம் மணக்கும் செய்யுளெலாம்"

இச்செய்யுளில் ஆசிரியர் சேக்கிழார் பாடலைத் தெய்வம் மணக்கும் செய்யுள் என்கிறார். இந்தக் கருத்தைச் சோழர் காலத்திற்கு முன் எவரும் ஏற்றுக் கொள்ளார்கள். சோழர் காலத்தில்தான் மக்கள் மனம் விரிவடைந்து அடியார்களும் தெய்வீகத்தில் சேர்த்துக் கொள்ளப்பட்டார்கள்.

மேலும் பிள்ளைத் தமிழ் முதன்முதலில் தெய்வங்களுக்கே பாடப்பட்டது. பெரியாழ்வார் முதலிய அடியார்கள் திருமால்மீது வைத்திருந்த பேரன்பினால் கண்ணனைக் குழந்தையாகப் பாவித்துப் பலவிதப் பருவங்களையும் கற்பித்துப் பாடப்பட்டது அப்பிரபந்தமாகும். பின்னல் சோழர் பேரரசுக் காலத்தில் அது அரசர்களுக்கும் ஒரோவழி ஆளப்பட்டது. உதாரணமாகக் குலோத்துங்கச் சோழன் பிள்ளைத் தமிழ் எழுந்தது. ஆனல் அக்காலத்திலும் பொதுவாக அப்பிரபந்தம் தெய்வங்களுக்கே உரிமையாக்கப்பட்டது. பிள்ளையார், முருகன், அம்மை, கண்ணன் முதலிய தெய்வங்களுக்கே பிள்ளைத் தமிழ் பாடி வணங்கினர்கள். பிற்காலத்தில் மடாலயங்களில் சில ஆதீனப் புலவர்கள் தோன்றித் தங்கள் குருபீடங்களுக்கு இப்பிரபந்தத்தை அணிவித்தார்கள். ஆனல் சாதாரண மக்களுக்கும் புலவர் பெருமக்களுக்கும் பிள்ளைத் தமிழ் பாடும் வழக்கம் நாட்டில் ஏற்படவில்லை. சேக்கிழார்பெருமான் தெய்வம் மணக்கும் பாடல் பாடினவர். ஆகவே அவரையும் தெய்வக் குழுவில் சேர்த்திப் பிள்ளைத் தமிழ் புனையப்பட்டது போலும். இச் சிறப்பு வேறெவர்க்கு வாய்த்திருக்கிறதோ?

இனி அவ்வாறு புகழப்படுவதற்குச் சேக்கிழார் எவ்வித் திவ்விய கருத்துக்களைக் கொண்ட கவிகளைப் பாடினர் என்று கேட்கலாம் அல்லவா?

இறைவனுடைய திருவுருவக் காட்சிகளை அடியார்கள் எவ்வாறு கண்டார்கள் என்ற பகுதிகள், இத் தெய்வம் கமழும் பாடல்களில் சிறந்தவையாகும். அவ்விதச் சிறப்புப் பகுதிகள் திருத்தொண்டர் புராணம் தவிர வேறோர் நூலில், இத்தனைப் பத்திச் சுவை சொட்டச் சொட்டப் பாடப்பட்டுள்ளதோ ஆராயுங்கள்.

முதலில் சுந்தரர் தில்லைக் கூத்துகந்தானை எவ்வாறு கண்டார்?

" ஐந்து பேரறிவும் கண்களே கொள்ள
அளப்பரும் கரணங்கள் நான்கும்
சிந்தையேயாகக் குணம்ஒரு மூன்றும்
திருந்து சாத்துவிக மேயாக
இந்துவாழ் சடையான்ஆ டும்ஆனந்த
எல்லையில் தனிப் பெருங்கூத்தின்
வந்தபேர்இன்ப வெள்ளத்தில் திளைத்து
மாறிலா மகிழ்ச்சியின் மலர்ந்தார் "

பிறகு நாவுக்கரசர், பெருமானை எவ்வாறு கண்டார்?

" கையும் தலைமிசைபுனை அஞ்சலியன ;
கண்ணும் பொழிமழை ஒழியாதே
பெய்யும்தகையன ; கரணங்களும் உடன்
உருகும் பரிவின ; பேறெய்தும்
மெய்யும்தரைமிசை விழுமுன் பெழுதரும் ;
மின்தாழ் சடையொடு நின்றாடும்
ஐயன்திருநடம் எதிர்கும் பிடும்அவர்
ஆர்வம் பெருகுதல் அளவின்றால் !"

இனி ஞானசம்பந்தர் அதே பெருமானை எவ்வாறு கண்டார்?

" அண்ணலார் தமக்களித்த மெய்ஞ் ஞானமேயான அம்பலமும், தம் உண்ணிறைந்த ஞானத்தெழும் ஆனந்த ஒருபெருந் தனிக் கூத்தும், கண்ணின் முன்புறக்கண்டு,கும் பிட்டெழும் களிப்பொடுங் கடற்காழிப் புண்ணியக் கொழுந்தனை யவர் போற்றுவார் புனிதராடிய பொற்பு "

இறுதியாகச் சேரமான் பெருமான், ஆடல் அரசினை எவ்வாறு கண்டார்?

"அளவில் இன்பப் பெருங்கூத்தர் ஆடஎடுத்த கழல் காட்ட
உளமும் புலனும் ஒருவழிச்சென் றுருகப் போற்றி உய்கின்றார்,
களனில் விடம்வைத் தளித்தஅமு தன்றி மன்றில் கழல்வைத்து
வளரும் திருக்கூத் தமுதுலகுக் களித்த கருணை வழுத்தினர்"

இவ்வாறு இறைவனை நான்கு பெருமக்களும் கண்ட காட்சிச் சிறப்புகள் சிறிதும் மாறுபடாத ஆனந்த வெள்ளமாக இருக்கக் காண்கிறோம். இந்த ஒரு எடுத்துக் காட்டே பெரியபுராணத்தைத் தெய்வம் கமழும் பாடல் என்று சொல்ல இடம் தருகின்றது அல்லவா?

இனி எதிர்முகத்தால் விளக்கும் பொருட்டுப் பிற நாட்டார் கொள்ளும் கொள்கைகளையும், அவற்றில் காணும் ஒற்றுமையின்மையும் ஒரு சிறிது கூறுவாம்.

சீன நாட்டில் ஒரு சிறந்த ஓவியம் இருக்கிறது. அதை உலகம் முழுதும் வியக்கின்றது. ஒரு வெட்டவெளியில் ஒரு பெரிய தட்டையான அண்டா வைக்கப்பட்டிருக்கிறது. அது நிறைய மதுரசம் வைக்கப்பட்டிருக்கிறது. அதன் விளிம்பின் முப்புறங்களில் மூன்று அறிஞர்கள் நிற்கிறார்கள். ஒருவர் இந்திய நாட்டுப் புத்தர். மற்றொருவர் ஜப்பான் நாட்டு லயோவோத்சே. மூன்றாமவர் சீனநாட்டுக் கன்பூசியஸ். இம்மூவரும் மதுவைப் பார்த்துவிட்டுத் தம் எண்ணங்களை முகச் சாடையினால் காட்டுகிறார்கள். புத்தர் அது கசப்பு என்று முகத்தைச் சுளிக்கிறார். லயோவோத்சே அது களிப்பு என்று முகத்தில் புன்னகை பூரிக்கின்றார். கன்பூசியஸ் அது புளிப்பு என்று முகச்சாடையில் காட்டி அதில் சிறிது சர்க்கரை சேர்த்தினால் எல்லாம் சரிப்பட்டுப் போகும் என்று நினைக்கிறார். இம்மூவரும் ஒரே பொருளைத் தங்கள் வாழ்க்கை நிலைமையைப் பொருத்து மூன்று விதங்களாகப் பாவிக்கின்றார்கள். இங்கே சர்க்கரை என்பது இறையிடத்தன்பு என்று உவமிக்கப்படுகிறது.

இனி இதனையும் சேக்கிழார் வகுக்கும் ஓவியத்தையும் ஒப்பிட்டுப் பாருங்கள். மூவர் பெருமக்களும் சேரமான் பெருமாளும் தில்லையெம்பெருமானை ஒரே பண்பில் பார்க்கிறார்கள். கருத்து வேற்றுமை சிறிதும் இல்லை. அக்காட்சியும் தெய்வீகக் காட்சியாக ஒற்றுமைப்பட்ட மனப்

பான்மையாக மிளிர்கின்றது. ஆகவே சேக்கிழார் செய்யுள் தெய்வம் மணக்கும் செய்யுள், அல்லவா ?

மேலும் இறைவனைக் காணும் காட்சி மட்டும் அன்று. இறைவனுடைய குணங்கள், அருட் செயல்கள், முதலிய வைகள் எல்லாம் வெகு தெளிவாகத் திருத்தொண்டர் புராணம் கூறுகின்றது. இறைவன் அங்கங்களாகிய திருத் தசாங்கங்களை வாதவூரடிகளைப்போல எடுத்துக்காட்டினால், திருத்தொண்டர் புராணத்திலிருந்து ஒவ்வொரு கூற்றிற்கும் எண்ணிறந்த எடுத்துக்காட்டுக்களைக் கூறலாம். இவைகள் எல்லாம் சேக்கிழார் செய்யுள், தெய்வம் மணக்கும் செய்யுள் என நிரூபிக்கும். ஏனைய புலவர் பெருமக்கள் செய்யுட்களைக் காட்டிலும் சேக்கிழார் செய்யுளே ஏற்றம் தருகின்றது என்றும் அறியலாம்.

வரவேற்புரை *

வெ. சி. சுப்பைய கவுண்டர்

இன்று நாம் பழந்தமிழ்ப் பண்பைப் போற்றுகின்றோம்; பழந்தமிழரசைப் பேணி விழா எடுக்கின்றோம். ஆம். சேக்கிழார் தமிழ்நாட்டுத் தனிமுடி கவித்தாண்ட அநபாயனின் முதலமைச்சர் அல்லவா? இவ்விழாவிற் பங்கு கொள்ளும் உங்கள் அனைவரையும் வருக வருக என மகிழ்வுடன் வரவேற்கின்றேன்.

சென்ற சில மாதங்களுக்குமுன் நம் நகரத்தில் காவியப் பெருமகனும் கம்பனுக்கு விழாவெடுத்தோம். மேம்பட நடத்தினோம். அவ்விழாவிற் பொங்கிய எழுச்சி சேக்கிழார் விழாவிற்கு வித்தூன்றியது. என்? காவியங் கண்ட கலைஞனைப் போற்றும் நாம் வரலாற்றுக் காவியமாம் அருள் நெறித் தொகுப்பினைத் தென்குமரி வடவெல்லையுள்ளிட்ட தொண்டர் பெருமையுடன் தந்த மதியமைச்சருக்கு விழா எடுக்கவேண்டாமா? என்று தோன்றியது எனக்கு. அன்றே வெளியிட்டேன் என் கருத்தை. அது இன்று

---

*22–4–56ல் நடைபெற்ற கோவைச் சேக்கிழார் திருவிழாவில் நிகழ்த்தியது.

செயலில் நிகழ்கின்றபோது செந்நெறித் தலைவரை, சொல் லேருழவரை, சொல்விருந்தயரும் உங்களைக் காணுந்தோறும் மகிழ்கின்ற பெரும் பங்கை எனக்குத் தந்திருக்கின்றீர்கள்.

கம்ப நாடன் ஒரு கருத்தோவியத்தை வால்மீகியி லிருந்து வடித்தெடுத்தான். எத்தனையோ பகுதிகளைப் பிரித்து அகற்றிச் சேர்க்கவேண்டிய செந்தமிழ்ப் பண்பாம் சுதையமைத்து உருவாக்கினான். அவ்வுருவம் கம்ப ராமா யணம். அதில் புவிச் சக்ரவர்த்தியாம் இராமன் கதாநாய கன். அக்கதையில் ‘அன்னையும் தந்தையும் முன்னறி தெய் வம்’ என்ற அறத்தை நிலைநாட்டுகிறான் இராமன். மாமுடி துறந்து வனம் புகுகின்றான். கணவனுக்குரியது தனக்கும் உரியது என்று மரவுரி புனைந்து உடன் செல்லுகிறாள் சீதை. அண்ணன் நிலையறிந்து சீறியெழுந்த தம்பி இலக்கு வன் தமையன் சொற்காத்துப் பின் செல்லுகின்றான். மணி முடி கவிக்க இருக்கும் பரதன் அண்ணன் நிலையறிந்து தமயனைப்போலக் கோலம்பூண்டு அண்ணன் பாதுகைகளை ஏந்தி அதன் வழி அரசு நடத்தினான் என்னும் வரலாற் றில் பழந்தமிழ் வாழ்வும், அறமும் எவ்வாறு நிலைபெற்றிருந் தன என்பதை அறிகின்றோம். தம்பியர் பண்பும், மனைவி யின் நிலையும், மக்கள் செயலும் இதுவென அமைத்து இது போன்ற இல்லற நெறி காட்டுவதே கம்பன் காவியம்.

நம் சேக்கிழார் மதியமைச்சர். மன்னனால் விரும்பி ஏற்றுக்கொள்ளப்பட்டவர். ‘தொண்டை நாடு சான்றோ ருடைத்து’ என்னும் சொல்லை மெய்ப்பித்தவர். அவர் வரலாறு உங்களுக்குத் தெரிந்திருக்கலாம். வள்ளுவர் அருளிய குறளின் விளக்கமாக அவர் வரலாறு தொடங்கு கின்றது. மலையிற் பெரிது, கடலிற் பெரிது, உலகிற் பெரிது எது என்பதைக் கூறுமாறு பல நாட்டுக்கும் அனுப்பிய ஓலையின் செய்தியுணர்ந்து திருக்குறளால் விடை பகர்ந்தார் சேக்கிழார். இதோ அந்தக் குறட்பாக்கள்,

“நிலையில் திரியாது அடங்கியான் தோற்றம்
மலையினும் மாணப் பெரிது”

“பயன் தூக்கார் செய்தஉதவி நயன் தூக்கின்
நன்மை கடலிற் பெரிது”

"காலத்தால் செய்தநன்றி சிறிதெனினும்
ஞாலத்தின் மாணப் பெரிது"

பின்னர், சோழன் அவரைத் தனது மந்திரியாக ஏற்றுக் கொண்டான். சோழப் பேரவையில் சமண நூலாகிய சிவக சிந்தாமணி முதன்மை பெற்றிருந்தது. அதுகண்ட சேக்கிழார் நமது சைவ சமயத்தின் தொண்டர்கள் வரலாறு சிறந்த முறையில் இருக்கின்றது என அரசனுக்குத் தெரிவித்தார். அரசனும் அவருக்கு வேண்டிய அனைத்தும் உதவி அந்நூலை உருவாக்குமாறு வேண்டினன். சேக்கிழார் பிறர் போலத் தன்னிச்சையாகப் பாடாமல் இறைவனது அருள் வேண்டி ஓராண்டு தில்லைப் பெருங் கோயிலில் தவமிருந்து, இறைவன் "உலகெலாம்" என வாக்கு எடுத்துத் தந்தபின் அவன் அருள்வழி நின்று பாடினர் என்பது நாம் அறிந்ததே.

இறைவன் அருள் வழி நின்ற சேக்கிழார், தம் திருத்தொண்டர் புராணமாம் பெரிய புராணத்தைப் பிறமொழியிலிருந்து மொழி பெயர்க்கவில்லை; பிறமொழிக் காவியத்தைச் செந்தமிழ் ஓவியமாக்கும் கவலையும் அவருக்கில்லை. நம் தமிழ்நாடு பண்பார்ந்த அறவோர் வாழ்ந்த நாடு. இந்நாட்டில் எத்துணை எத்துணை வரலாறுகள், எத்துணை எத்துணைச் செயற்கருஞ் செயல்கள் உண்டோ, அத்துணையும் உருவாக்கும் சொற்சிற்பியாக விளங்கினர் சேக்கிழார். சேக்கிழார் காலம் இடைக்காலம். அவர் காலத்தில் புத்தமும் சமணமும் தமிழ்நாட்டில் தளிர்த்துக்கொண்டிருந்தது. அதன் காரணமாக, தமிழ் மன்னர் வடநாட்டின் மேற்சென்று உரிமை பெற்றதன் காரணமாக, வடமொழிக் கொள்கைகள் உருப்பெற்ற காலம். பண்டைத் தமிழ் நெறி—மொழி—பண்புகளை மெருகிடவேண்டிய எழுச்சிக் காலம் என்று சொல்லவேண்டியிருக்கின்றது. சேக்கிழார் தமிழகத்தின் மூலை முடுக்குகளில் நிகழ்ந்தவைகளையெல்லாம் தேடி எடுத்தார். அரசன் முதல் சாதாரணக் குடிமகன் வரையுள்ள அத்துணை வரலாறுகளும் அவருள்ளத்தில் இடம் பெற்றன. அவற்றிற்கு முந்தையோர் தந்த திருத்தொண்டத் தொகையும், திருத்தொண்டரந்தாதியும் தொகை வகையாக விளக்கந் தந்தன. அரசுத் துணையால் ஆங்காங்குள்ள நாட்டு நடப்புகள், கல்வெட்டுகள் அனைத்தையும் அறிந்தார்.

சமய குரவர்கள் தந்த அற்புதத் தேவாரத் திருமுறைகளை யுணர்ந்தார். இவற்றை யெல்லாம் துணையாகக்கொண்டு தமது காவியச் சிற்பத்தை உருவாக்கினர். அதனுள் இருக்கும் புதையல்கள் எத்துணையெத்துணையோ! சிவக் கவிமணி போன்றோரிலிருந்து இன்று ஆராய்கின்ற பற்பல அறிஞர்களும், அப்புதையலை எடுத்துப் பயன் படுத்துகின்றனர். நம்மனோர்க்கும் தருகின்றனர். என்? இதோ இப்பொழுதும் நமக்களிக்கப் பலர் இங்கு இருக்கின்றனர்.

சேக்கிழார் தந்த திருத்தொண்டர் புராணம் கடவுள் இத்தன்மையரெனப் புகட்டும் சமய இலக்கணம். தமிழர் வாழ்வு இதுவெனக் காட்டும் இலக்கியம். தமிழ் முன்னோர் இவரெனக் காட்டும் வரலாறு. தமிழாற்றல் இதுவெனக் காட்டும் கருவூலம். இறைவன் தமிழ் வடிவினன்; தமிழ்ப் பிரியன்; இசையாய், இசைப்பயனாய் இருப்பவன்; அவன் அன்பர் அகக்கோயிலையும் அழகிய புறக்கோயிலையும் இடமாகக் கொண்டுள்ளான். அவனுக்கு உயர்ந்தோர் தாழ்ந்தோர் என்ற எண்ணம் கிடையாது; சிறியர் பெரியர் என்ற நிலையில்லை. கற்றோர் கல்லாதோர் என்ற பாகுபாடும் இல்லை. அவன் செந்தமிழுண்ணல்; பாட்டுக்குருகுவான்; பாடுவோருக்கருளுவான்; பின் செல்வான்; பணிபுரிவான்; எத்துணையோ அற்புதங்களைத் தமிழ்ப்பாக்கள் கேட்டுச் செய்விப்பான் என்பன வெல்லாம் காட்டுகிறது பெரிய புராணம்.

அவர் ஒவ்வொரு பாத்திரத்தையும் மிகச் சிறந்த முறையிலேயே அமைக்கின்றார். காட்டில் காணும் கண்ணப்பர், கலைவளம் மிக்க சேரமான், ஞானப்பாலுண்ட சம்பந்தர், நஞ்சுண்டுயர்ந்த நாவரசர் போன்ற பெருமக்களை அவ்வந்நிலையிலேயே நம்முன் அவரவர் பண்பாட்டுடன் காட்டிக் கனியவும் உருகவும் வைக்கின்றார் நம் சேக்கிழார். மனையறத்தில் உயர்ந்து வீடெய்தலாம், மங்கையரும் சிறு குழந்தைகளும் வீட்டுநெறி யெய்துதற்கு விலக்கில்லை யென்பதை யெல்லாம் எடுத்துக் காட்டுகின்றார். இன்னும் உள்ளம் பெருங்கோயில் என்று உருவாக்கும் பூசலாரும், கணவனுக்கும் தம்பிக்கும் அறவுரை கூறி நன்னெறி நிறுத்தி வாழ்விக்கும் மங்கையர்க்கரசியாரும், திலகவதியாரும், அன்பின் திருவுருவாம் கண்ணப்பர், அறத்தின் வடிவாம் இளையான்

குடிமாறநாயனர் போன்ருேரும் நாம் காணும் இலக்கியச் செந்நெறியாளர்களாக விளங்குகிருர்கள். இதுமட்டுமா?

தமிழ்ப் பாட்டே அருச்சனை என்பதை ஆதிசைவராம் சுந்தரர் வரலாற்றிலும், தமிழ்ப் பாட்டே திருமணச் சடங்கு என்பதை மறைவல்ல சம்பந்தர் மருகலில் விடந்தீர்ந்து மண முடித்த வரலாற்றிலும் காட்டுகின்ருர். இதோ! அர்வு தீண்டினும், முதலையுண்ணினும், வெப்பு நோய் வரினும், நலம் பெறச் செய்வதற்குத் தமிழ்ப் பாட்டு முன்னிற் கின்றது. செஞ்சடை யண்ணலைத் தோழனகைப்-பாங்கனகை வரச் செய்ததும் தமிழ்ப்பாட்டுதான் என்று வரையறுத்துக் கூறுவது சேக்கிழார் காவியம்.

சேக்கிழார் அப்பரடிகள் வரலாற்றில் நாட்டுவளங் கூறும்போது ஓர் காட்சியை விளக்குகின்ருர். சேக்கிழார் ஓர் உழவர். பாடும் வரலாறு ஓர் உழவர் பெருமகனைப்பற்றியது. அவ்வரலாற்றில் கரும்புத் தோட்டத்தைப் பற்றிக் கூறுகின்ருர். அவர் கூறுவதைப் பார்த்தால் அதில் பயிற்சியில்லாதவர்கட்குப் புனைந்துரையாகத் தோன்றும். ஆனல் என்போன்ற உழவர்கள் அடிக்கடி இக்காட்சியைக் கண்டிருப்பார்கள். கருப்பஞ்சாறு பெருகி வழிகின்றது. அது வழிந்தோடும்போது அத்தொழிலாளிகள் அதனை வழியாது தடுப்பதற்கு மண்ணை யள்ளிப் போடமாட்டார்கள். பக்கத்திலிருக்கும் வெல்லத்தை வைத்து அடைப்பார்கள். இது இயல்பாக நடைபெறுவது. இதைச் சேக்கிழாரும் அப்படியே பாடுகின்ருர்.

அப்பாட்டு :—

“ கடைஞர்மிடை வயற் குறைத்த கரும்புபொழி கொழுஞ்சாறு
இடைதொடுத்த தேன்கிழிய இழிந்தொழுகு நீத்தமுடன்
புடைபரந்து ஞிமிறெலிப்பப் புதுப்புனல்போல் மடையுடைப்ப
உடைமடைஅக் கரும்படுகட் டியினடைப்ப ஊர்கள்தொறும் ”

என்பதாகும். இதுபோலப் பல இயற்கைச் சிறப்புகள் அவருடைய நூலினிடத்து நாம் காண்கின்ருேம். மேலும், நமது தெய்வச் சேக்கிழார் தோன்றியது தொண்டை நாடு. நமது தமிழகம் சேரநாடு, சோழநாடு, பாண்டிய

நாடு எனப்பிரிக்கப் பட்டிருந்ததுடன், நடுநாடு தொண்டை நாடு கொங்குநாடு என்ற பிரிவுகளும் உடையதாக இருந் தது. இவற்றைப் பற்றியும், இவற்றின் வளம், சிறப்பு ஆகியவைகளையும் சேக்கிழார் பாடியுள்ளார். தமிழ்நாட்டு மூவேந்தர்கட்குக் கொங்கு நாட்டு ஓர் வேளாளர் தலைவன் வேணாவுடையான் மதுக்கரையை எல்லை வகுத்துக் கொடுத்ததாகவும் பண்டை நூலொன்று கூறுகின்றது.

கம்பன் காவியத்தில் காணும் அவதார புருடர்களாகிய தலைமக்கள் எங்கெந்த விதத்திலோ மறைந்தார்கள் என்று கூறுகின்றது. ஆனால் நம் திருத்தொண்டர் புராணத்தில் காணும் அருளாளர்கள், சமயகுரவர்கள் எலும்பைப் பெண்ணாக்கியதும், வாழ்வின் இறுதியில் அனைவருக்கும் வீடளித்ததும் போன்ற அற்புதச் செயல்களையும் பெருமை களையும் எடுத்து விளக்குகின்றார் நமது சேக்கிழார்.

அத்தகைய சேக்கிழார் பெருமைவாய்ந்த திருத்தொண் டர் புராணத்தைத் தில்லைக் கூத்தன் திருமுன்பு ஓராண்டு பாடி சித்திரைத் திங்களில் அரங்கேற்றினார். இன்று நாம் பேரூர்ப் பகுதியாம் ஆறை நாட்டில் அப்பெருமகனார்க்கு விழாவெடுத்திருக்கின்றோம். இது மிகவும் பொருத்தமான தும் மகிழ்வுக்குரியதுமாகும்.

நமக்கு வழிகாட்டும் திரு. தொண்டைமான் அவர்கள் இராமாயணம், திருத்தொண்டர் புராணம் போன்ற காவி யங்களில் உளம் செலுத்தி வாழ்பவர். அவர் செயற்கருஞ் செயல் செய்த தொண்டர் புராணத்தையும் சிறந்த தம்பியர் நிலைகூறும் கம்பன் காவியத்தையும் சமன் செய்து சீர்தூக் கும் கோல்போல் ஆய்ந்து பட்டி மன்றத்தில் விளக்கம் தரு மாறு கேட்டுக்கொள்ளுகிறேன்.

இன்று செயற்கருஞ் செயல் செய்த திருத்தொண்டர் களில் அன்பின் முதிர்ந்த கண்ணப்பர், அறத்தின் வடிவாம் திருநீலகண்டர், ஆற்றலிற் சிறந்த சிறுத்தொண்டர் ஆகிய வர்களைப் பற்றி அறிஞர் பெருமக்கள் நமக்கு விளக்கந்தர வுள்ளனர். இவர்கள் கூறும் உரைகளை நீங்கள் கவனத் துடன் கேட்க விருக்கின்றீர்கள். நடுவாளராக நம் மாவட் டத்தலைவர் அமர்கின்றார். விழாவின் வெற்றிக்கு வேறு என்னவேண்டும்.

சோழமன்னர்களின் சைவ சமயத்தொண்டு*

G. கலியாணம், M.A., D. Econ.

முடியுடைத் தமிழ் மன்னர் மூவேந்தருள் பாண்டியர் சங்கம் வைத்துத் தமிழ் வளர்த்தனர். இவர்கள் காலத்தால் இடைப்பட்டவர்கள். பரம சைவராகவும், பரம வைணவ ராகவும் இருந்திருக்கின்றனர். கூன் பாண்டியன் என்னும் நெடுமாறன் சமணனாக இருந்து சைவனானான். சோழர் களுக்கும் தமிழ் வளர்த்த பெருமை உண்டு. எட்டுத் தொகை, பத்துப்பாட்டு முதலியவைகளைப் பார்த்தால் தெரியும். கம்பர், சேக்கிழார் இவ்விருவரும் பாண்டி நாட்டையே தமிழ்நாடு என்பர்.

கோச்செங்கட் சோழன் 70 மாடக்கோயில்கள் கட்டினான். அப்பர், திருமங்கையாழ்வார் இதைப் பற்றிக் குறிக்திருக்கிறார்கள். பல்லவர்கள் சமணர்களாகவும், களப்பிரர்கள் பௌத்தர்களாகவும் இருந்தார்கள். அந்தக் காலத்தில் சைவத்துக்கு ஆட்சியில்லை. இவ்விருவரும் சண்டையிட முடிவில் சமணர் வெற்றி கண்டனர். சமணர்கள் இலக்கண இலக்கியங்களை எழுதித் தமிழை வளர்த்தார்கள். தென் பாண்டிநாடு சென்று சம்பந்தர் சைவசமய மயமாக்கினர்; வட பகுதியை அப்பர் சைவ வழியில் திருப்பினர். அப்போது தமிழ்நாட்டில் சிறு கோயில்களே இருந்தன. முதல் கோயில் அமைத்தவன் இரண்டாம் மகேந்திரவர்மன் என்ற பல்லவ மன்னன். அது காஞ்சியிலுள்ள கைலாசநாதர் கோயில். முதலில் குகைக் கோயில்களை வெட்டினான். அந்தக் காலத்தில்தான் லிங்கத்தின் முன் நந்திவைக்கும் வழக்கம் ஏற்பட்டது. அவன் கட்டிய கோயிலுக்கு அடையாளம் சிவலிங்கத்தின் பின்னால் சோமாஸ்கந்தர் உருவம் இருக்கும். எட்டாம் நூற்றாண்டில் மணிவாசகர் இருந்தார். ஒன்பதாம் நூற்றாண்டில் சோழ மன்னர் ஆட்சி வந்தது.

---

*சிதம்பரத்தில் சமாஜப் பொன்விழாவில் 1-1-56-ல் அண்ணாமலைப் பல்கலைக்கழக ஆராய்ச்சிப் பேரறிஞர் திரு. T. V. சதாசிவப் பண்டாரத்தார் அவர்கள் நிகழ்த்திய சொற்பொழிவின் சுருக்கம்.

சோழ மன்னர்கள் மூவர் பதிகம் பெற்ற பதிகளை யெல்லாம் கற்கோயில்களாகக் கட்டினார்கள். முதலில் பாடல் பெற்ற பதிகளில் ஆலயங்களை அமைத்தார்கள். பின்னர்க் காவிரியின் இரு கரைகளிலுமுள்ள கோயில்களைக் கட்டினார்கள். திருநாகேச்சுரம், திரு எறும்பியூர், திருப்புறம்பியம் இவைகளை ஆதித்த சோழன் கட்டினான். பராந்தகன் திருவிடைமருதூர், திருபுவனம் இவைகளைக் கட்டினான். இராசாதித்தன், திருவெண்ணெய் நல்லூர்ப் பக்கம் 'கிராமம்' என்ற ஊரில் ஒரு கோயில் கட்டினான். கண்டராதித்தர் என்ற சோழ மன்னரின் மனைவி செம்பியன் மாதேவி. அவ்வரசியார் 60 ஆண்டுகள் வாழ்ந்து கோயில்கள் கட்டி நிவந்தங்கள் விட்டிருக்கிறார். முதலில் கட்டியது கோனேரி ராசபுரம். அதற்குத் திருநல்லம் என்று பேர். அத்தேவியார் இறுதியில் கட்டிய கோயில் திருவக்கரை. ஆடுதுறை, குற்றாலம், விருத்தாசலம் இப்பெருங்கோயில்களையும் அவ்வம்மையாரே கட்டினார். திருப்பதிகம்பாட ஏற்பாடு செய்தனர். ஒரு கிராமத்தையே மூவர் பதிகம் பாடுவதற்கென விட்டிருக்கின்றனர். செம்பியன் மாதேவியார்க்கு 60 வயதாகும்போது இராசராச சோழனுக்கு 20 வயது இருக்கலாம். தஞ்சாவூர், கங்கைகொண்ட சோழபுரம் இவைகளைப் பாடல் பெறாவிடினும் கட்டினார்கள். பிறகு ஊருக்கொரு கோயில் கட்டினார்கள். "மூவர் மூந்நூறு, சோழர் ஐந்நூறு" என்று ஒரு பழமொழியும் உண்டு. இராசராசன் தன் தாயின் பேரால் இலங்கையிலுள்ள பொலன்னருவையில் வானவன் மாதேவீச்சரம் என்ற கோயிலை எழுப்பினான். அவ்வம்மையார் உடன்கட்டை யேறிய பெருந்தேவியார். "இராசராசன் என்ற புலியைப் பெற்ற பொன்மான்" என்று கல்வெட்டுக்கள் கூறுகின்றன. 'தஞ்சைத் தளிக்குளத்தான்' என்று அப்பர் சொன்ன அதே இடத்தில் தான் இராசராசேச்சரம் என்ற பெருங் கோயில் அமைத்தான். அதன் கோபுரம் 216 அடி உயரம். 10,000 பொன் வருவாயுள்ள 55 ஊர்களை அக்கோயிலுக்காக வழங்கினான். இளம் வெந்நீரில் விளாமிச்சிவேர், ஏலக்காய், பெருஞ் சண்பகம் இவைகளை வெள்ளி அண்டாக்களில் ஊறவைத்து இறைவனுக்குத் திருமுழுக்குச் செய்விக்க ஏற்பாடு செய்தான். 90 கலம் நெல் கொடுத்து 50 பேர்களைத் திருப்பதிகம்

பாட ஏற்பாடு செய்தான். பரத நாட்டியத்திற்கு 400 பேர்களைக் கொண்டுவந்து குடியேற்றினன். அவைகளை யெல்லாம் பராமரிக்க நல்ல ஏற்பாடுகள் செய்தான். தஞ்சைக் கோயிலுக்குத் தென்னவன் மூவேந்த வேளான் என்பவனை அதிகாரியாக நியமித்தான். அவ்வதிகாரி வேறு கோயில்களுக்குப் பல நிவந்தங்கள் ஏற்படுத்திய காரணத்தால் அவனை நியமித்தான். கோயில்களைப் பார்க்க ஒரு குழுவினை (கமிஷன்) இராசராசன் நியமித்தான். இரண்டாம் கண்டராதித்தர் அக்குழுவில் ஒருவர். திடீரென்று ஒரு கோயிலைப் பார்வையிட்டு, சரியாக இல்லை யென்று தெரிந்து முத்திரை வைத்துவிட்டு, பிறகு வேண்டிய ஏற்பாடுகளை அக்குழுவினர் செய்திருக்கின்றனர். நிவந்தங்கள் ஒழுங்காக நடக்கிறதா என்று பார்ப்பதில் கண்ணும் கருத்துமாக இருந்தனர். சேனைபதியுள்பட அரசாங்க அதிகாரிகள் எல்லோருமே கோயில்களை மேற்பார்வை செய்திருக்கிறார்கள். இக்காலத்தில் அந்தத்துறை அதிகாரிகள்தான் பார்க்கலாம். குற்றம் கண்டால் கடுந்தண்டனை விதிக்கப்பட்டது. கோயில் மரங்களைவெட்டித் தானே பயன்படுத்திக் கொண்டவரை நாடு கடத்தப்பட்டது. அப்படிப் பயன்படுத்திக் கட்டிய வீடு இடிக்கப்பட்டு பிள்ளையார் கோயிலாகக் கட்டப்பட்டது. சிவத்துரோகமும், அரசத்துரோகமும் ஒன்ருகக் கருதப்பட்டன. அதற்குப் பயந்து பாண்டி நாட்டிற்கு ஓடியவர்களின் சொத்துக்கள் பறிமுதல் செய்யப்பட்டு ஏலம் போடப்பட்டது.

கோயில்கள் மூவகையான நிர்வாகத்தில் இருந்தன. அரசாங்க அதிகாரி நேரே பார்வையிடுவது. அவ்வாறுள்ளவை தஞ்சை, காஞ்சி முதலியன. சில கோயில்கள் மடத்தின் அதிகாரத்தில் விடப்பட்டன. அவைகளில் ஒன்று திருவொற்றியூர்க் கோயில். மற்றவை கிராமத்தார் மேற்பார்வையில் விடப்பட்டன.

கோயில் தோன்றக் காரணமாயிருந்த திருப்பதிகங்களை ஊர்தோறும் பாடச் சோழ மன்னர் ஏற்பாடு செய்தனர். திருக்கைக் கோட்டி மண்டபங்கள் அமைத்து பதிகங்களை ஓலைச் செப்பேடுகளில் எழுதச் செய்து அம்மண்டபங்களில் வைத்திருந்தனர். மூவர்களைத் திருக்கோயில்களில் எழுந்தருளுவித்து விழா எடுத்தனர். முதலில் தஞ்சையில் தென்

னவன் மூவேந்த வேளான் செய்தான். மெய்ப்பொருள் நாயனர், சிறுத்தொண்டர், சுந்தரர், பரவையார் இவர்களை எழுந்தருளுவித்தான்.

அக்காலத்தில் சட்டிச்சோறு நிவேதனம் செய்து அப்படியே கொடுத்துவிடுவார்கள். அவைகளைக் கோயிலி லேயே இருக்கும் மாகேசுரர்கள் உண்ணுவார்கள். இந்த மாகேசுரர்கள் வெறும் சோறுண்பவர்களாக மாத்திரம் இருந்துவிடவில்லை. கோயில் காரியங்களையும் கண்காணித்து வந்தனர். இவர்களுக்குத் தண்டிக்கும் அதிகாரமும் அரசர் களால் கொடுக்கப்பட்டிருந்தது. திருவாமாத்தூர் மக்கள் தஞ்சைக்கு நடந்துசென்று பராந்தக சோழனிடம் நிவே தனம் கோயிலுக்கு யானைமேல் எடுத்துச் செல்லப்பட வில்லை என்று விண்ணப்பித்தனர். முறையீட்டைக் கேட்ட மன்னவன் அவ்வாறே செய்யுமாறு ஏவினன். அதிகாரி, யானைப்பாகனுக்குக் கொடுத்த நிலத்தைப் பிடுங்கி வேறு பேருக்குக் கொடுத்துவிட்டான். யானையும், பாகனும் வேலை நிறுத்தம் (Strike) செய்துவிட்டனர். பிறகு நிலத் தைத் திரும்பி வாங்கிக்கொடுத்து அரசியற்றலைவன் ஒழுங்கு செய்தான். ஒரு கிராமத்தார் கோயில் நிலங்களுக்குச் சரியாக வரி கொடுக்கவில்லை. அக்காரணத்தால் மாகேசுரர் கள் அக்கினியில் வீழ்ந்திறந்தார்கள். அவர்களுக்குச் செப்புச் சிலையமைத்து வழிபாடியற்றினர். முனியூரில் குளம் வெட்டியபோது கோயில் நிலம் 10 மா நிலம் (சுமார் 3 ஏக்கர்) போய்விட்டது. மாகேசுரர்கள் 10 மாநிலம் இறையிலி (Tax free) யாக வாங்கிக்கொடுத்தார்கள். இந்த மாகேசுரர்கள் என்பார் அறநிலையங்களுக்குப் பெருந் தொண்டு புரிந்துள்ளார்கள்.

விக்கிரம சோழன் தில்லைப் பெருங் கோயிலைக் கட்டி னன்; நூற்றுக்கால் மண்டபம் கட்டினன்; 12 தூண்களில் விக்கிரம சோழன் மண்டபம் என்று பேர் வெட்டப்பட் டிருக்கிறது. இரண்டாங் குலோத்துங்கன் தில்லையம்பலத் தில் முடிசூட்டிக் கொண்டான். இரண்டாம் பிரகாரத் துக்குக் குலோத்துங்கன் திருச்சுற்று என்று பேர். இவனே தில்லைக் கீழைக்கோபுரத்தையும் கட்டினன். (பின்னல் பச்சையப்ப முதலியார் புதுப்பித்தார்). நான்கு வீதிகளிலும் 16 கால் மண்டபங்களும் கட்டினன்.

இரண்டாம் இராசராசன் தாராசுரம் கோயிலைக் கட்டினன். தலைநகர் பழையாறு, நந்திபுரம் என்று பேருடையது. சோழன் மாளிகை, ஆரியப்படையூர் என்ற ஊர்கள் இதைச் சுற்றியுள்ளன. புதைபொருள் ஆராய்ச்சிக்காரர் அவ்விடங்களை அகழ்ந்து பார்க்கவேண்டும். மூன்றும் குலோத்துங்கன் காலத்தில்தான் சேக்கிழார் பெரிய புராணம் பாடினர். இம்மன்னன் திருவாரூர், காஞ்சிபுரம், திருஆலவாய்க் கோயில்களைக் கட்டினன். திருவாரூர் அரனெறியைச் செம்பியன் மாதேவியார் கட்டினர். மேலும் மூன்றுங் குலோத்துங்கன்தான் திருவக்கரை, திருவாரூர், தில்லை, காஞ்சிபுரம் முதலிய கோயில்களில் 1000 கால் மண்டபங்கள் அமைத்தான். கோபுரங்களைப் பெரிதாகக் கட்டியவனும் இவனே. மதுரைக்கோபுரம் ஒன்று இவன் கட்டியது. கோயில்களுக்கு 100, 200 வேலி நிலங்கள் அளித்தான்.

கோயில்களுக்கு ஏராளமான நிலங்களை வழங்கிவிட்டால் மக்களுக்கு என்ன பயன்; மக்கள் பிழைப்பு என்ன ஆவது என்று நினைக்கலாம். கங்கைகொண்ட சோழன் மனைவியார் தில்லைக்கோயில் திருவிழாவிற்கு 4500 கல நெல் வருமானமுள்ள நிலங்களைக் கொடுத்தார். அதில் சரிபாதி (2250 கலம்) குடிமக்களுக்கும், மற்றப் பாதியே கோயிலுக்கும் கொடுக்கப்பட்டது. இரண்டாண்டுகளுக்கு மேல் குடிகள் சரிவர நெல் கொடுக்காவிட்டால் வேறு குடிகளுக்கு மூன்றுவது ஆண்டில் அந்த நிலங்கள் விடப்படும்.

கோயில்களில் நுந்தாவிளக்குகளுக்காக 96 ஆடு, 32 பசு, 16 எருமைகள் இவைகளை வாங்கிக் கொடுத்தார்கள். இவைகளைப் பராமரிப்பதில் ஒரு குடும்பமே பிழைக்கும். நந்தவனப் பெருந் தொண்டினலும் பல குடும்பங்கள் பிழைத்தன. கோயில் திருப்பணியால் சிற்பிகளுக்கும், அவர்கள் குடும்பத்திற்கும் பிழைப்புக்கிடமிருந்தது. நாட்டியம், இசை இவைகளுக்கு இருந்த ஆதரவால் பல குடும்பங்கள் பிழைத்தன.

அரசர்கள் தங்களுக்காகக் கட்டிய அரண்மனைகள் அழிந்துபோயின. ஆனல் அவர்கள் அன்போடும், பக்தியோடும் கட்டிய கோயில்கள் என்றும் அழியாமல் வீறு பெற நிற்கின்றன. அவர்கள் தங்கள் அரண்மனையை நினைத்

தார்களில்லை. பாடல்பெற்ற பதிகளையே எண்ணினார்கள். மகம்மதியர், அரபியர், சீனர் இவர்கள் வரலாறு எழுதி வைத்தனர். நம் தமிழ் மன்னர் கோயில்கள் கட்டிக் கல்வெட்டுக்களில் எல்லாவற்றையும் எழுதி வைத்தனர். தற்பெருமைக்கல்ல. பிற்காலத்தில் எல்லாம் ஒழுங்காக நடக்க வேண்டுமென்று எண்ணியே அவ்வாறு செய்தனர். சோழ மன்னர்கள் கோயில் கட்டிய பணியே பெரிய சமயத் தொண்டு. அவர்கள் அப்படிச் செய்ததால்தான் சைவசமயம் அழியாமல் நிலைபெற்றிருக்கிறது. அவர்கள் புகழ் வாழ்க.

சிவஞானபோதத் தெளிபொருட்சுருக்கம்*

பேராசிரியர் - பாரிப்பாக்கம்—கண்ணப்ப முதலியார்

உலகின்கண் பல்லாயிரக் கணக்கின்பாற் பட்ட ஆண்டுகளாக அறிவொளியைப் பரப்பிவந்த பேரறிவுடைய பெருமக்கள் பலராலும் உலகிற்கு உணர்த்தப்பட்ட எல்லா அறிவு நூன் முடிபுகளையும் தன்னகத் தடக்கி, அவைகள் எல்லாவற்றிற்கும் மேம்பட்ட முடிந்த முடிபு ஈதெனக் காட்டுவது நம் சிவஞான போதமாம்.

நம் கண்ணாற் காணப்பட்ட இயற்கையுலகின் தன்மை இன்னதென விஞ்ஞானக் கலைவழியாய்க் கண்டுணர்ந்த பெருமக்களும்; அவ்வியற்கையுலகின் உண்மைத் தன்மையை இன்னதெனத் தமது ஞானத்தின் வாயிலாக உணர்ந்த பெருமக்களும்; இயற்கையுலகின் தொடர்புடைய உடல்வயப்பட்டு இன்ப துன்ப நுகர்ச்சி எய்தி நிற்கும் உயிர்களின் இயற்கையுண்மை இனையதென ஆய்ந்துணர்ந்த பெருமக்களும்; இவ்வியற்கையுலகின் நிகழ்ச்சிகளானும், இவ்வியற்கையுலகின் தொடர்புடைய-உடலால் உணர்த்தப்படும் உயிர்களின் இயற்கை நிகழ்ச்சிகளானும், இந்நிகழ்ச்சிகளுக்குக் காரணமாக நிலவும் அறிவொளிப் பிழம்பாகிய கடவுட் பொருளின் இன்ப உண்மை இன்னதெனக் கண்ட பெரு

---

*இக்கட்டுரைகளைத் தம் தந்தையாரின் பழைய குறிப்புகளினின்று தேடிக்கொடுத்த திரு. P. K. கௌரிசங்கரன் அவர்களுக்கும், இவற்றை ஆராய்ந்து திருத்தமாக எழுதி யுதவிய புலவர் முருகவேள் அவர்களுக்கும் சமாஜத்தின் நன்றி உரியது—தி. கி. நா.

மக்களுமாகிய எல்லோராலும் உணர்த்தப்பட்ட உண்மை முடிபுகளெல்லாம் இதன்கண் அடங்கிக் கிடக்கின்றனவா மெனின், இதன் பெருமையை யாரே அளவிட்டுரைக்க வல்லார் ?

இத்துணை அரும்பெரு முடிபுகளையெல்லாம், இருநூற்றுப் பதினாறு (216) சொற்களாலாகிய நாற்பத்தோர் (41) அடிகளையுடைய, பன்னிரண்டு சூத்திரங்களில் வடித்தெடுத்துக் கூறும் சிவஞானபோதம் என்னும் இவ்வரிய பெரிய ஞானநூலினைப் போன்ற சுருக்கமும் விளக்கமும் ஒருங்கே வாய்ந்த சிறந்ததொரு நூல், உலகில் வேறெந்த நாட்டிலும் வேறெந்த மொழியிலும் இல்லை என்பது நினைவிற் பதிக்கற்பாலது ! இத்தகைய ஒப்புயர்வற்ற மெய்ப்பொருள்நூலின் தெளிபொருட் பிழிவாகத் திரண்ட கருத்துக்களை மட்டும், இயன்ற அளவு மிகமிகச் சுருங்கிய முறையில் யாவர்க்கும் விளங்கும் வகையில் ஆராய்ந்து காண முயலுவோமாக !

சிவஞான போதம்

பிரமாண இயல்

முதற் சூத்திரம்

அவன்அவள் அதுஎனும் அவை,மூ வினைமையின்
தோற்றிய திதியே ; ஒடுங்கி மலத் துளதாம் ;
அந்தம் ஆதி என்மனார் புலவர் !

என்பது சிவஞானபோதத்தின் முதற் சூத்திரம். "அவன் என்றும் அவள் என்றும் அதுஎன்றும் பலவாய்ச் சுட்டி புணரப்படும் சொல்லும் பொருளுமாய இருவகை உலகத் தொகுதி, தோற்றம் நிலை இறுதி என்னும் முத்தொழில்களை யுடைமையால், ஒருவனால் தோற்றுவிக்கப்பட்டதாய உள் பொருளேயாம். அது தோன்றுங்கால் தான் ஒடுங்குதற்கு ஏதுவாய் நின்ற கடவுளினின்றும் சகசமலம் நீங்காமையால், அது நீங்குதற் பொருட்டு மீளத் தோன்றுவதாம். இவ்வாறாதலின், அந்தமாகிய முடித்தற் றொழிலைச் செய்யும் கடவுளே உலகிற்கு முதற் கடவுள் என்பர் அளவைநூல் உணர்ந்தோர் " என்னும் பொருளை உடையது இது.

மெய்கண்டார் என்னும் ஞானசிரியர் " காணப்பட்ட இவ்வுலகிற்கு முதற் கடவுள் சிறப்புவகையான் உண்டு "

என்னும் உண்மையினை, இவ்வுலகினைக் கொண்டே உணர்த்தத் தொடங்கினர். இவ்வுலகமானது,

> " நிலம்தீ நீர்வளி விசும்போடு ஐந்தும்
> கலந்த மயக்கம் உலகம் ஆதலின் "

என்ற ஆசிரியர் தொல்காப்பியனர் கூற்றின் வண்ணம், மண் நெருப்பு நீர் வளி வெளி என்னும் ஐந்து முதற்பொருள் களின் செயற்கையாலாயது. இவை அனைத்தும் அறிவில் லாத சடப்பொருள்களேயாம். இச் சடப்பொருள்களின் தொடர்புடைய உடலால் அறியப்படும் சித்துப் பொருள் களும் கலந்ததே இவ்வுலகமாம். இவ்வுலகினை ஆராய்ந்த பலரும், அறிவில்லது (சடம்) அறிவுள்ளது (சித்து) என்னும் இருகூற்றின்கண் அடங்குவதாகவே முடித்தார்கள். இங் ஙனம் முடிக்கப்பெற்ற இவ்வுலகம், அவன் அவள் அது என்னும் மூன்று பகுப்புடையதாகக் காணப்படுகின்றது. அவன் அவள் என்பன அறிவு (சித்து) லகத்தினையும், அது என்பது அறிவில் (சட) உலகினையும் உணர்த்தி நிற்கின்றன. இவை தம்முள் 'சித்து' எனப்படும் அறிவுலகம் நேரே நம் கண்களாற் காணப்படுவதன்று. நம் கண்களாற் காணப்படுவது சடவுலகமேயாம். முன்னே நாம் குறிப் பிட்ட வண்ணம் இச் சடவுலகமானது, மண் நெருப்பு நீர் வளி வெளி என்னும் ஐந்து முதற்பொருள்கள் ஒன்று சேர்ந்த காரியப்பாடாகக் காணப்படுகின்றது. இவ்வாறு காரியப்பாடாகக் காணப்படுகின்ற இவ்வுலகம் சடப்பொரு ளாதலின், தானே தொழிற்படமாட்டாது. எனவே, இத னைக் காரியப்படுத்துவான் ஒருவன் உண்டு என்பது பெறப் படுகின்றது. மேலும், இது காலப்போக்கில் அழிவெய்திக் காரண நிலையை அடையும் என்பதும் தெளிவாகின்றது. தனித்தனியே காணப்படும் தோற்றம் நிலை இறுதியாகிய முத்தொழிலைக் கொண்டு, உலகம் முற்றும் ஒருங்கே அழிந்துபடும் எனக் கூறுதல் எவ்வாறு பொருந்தும் எனின், உலகில் ஒவ்வொருவகைப் பொருள்கள் ஒவ்வொரு காலத்தில் ஒருங்கே தோன்றிப் பிறிதொரு காலத்தில் ஒருங்கே அழியக் காண்கின்றோம். இப்பொருள்கள் ஒருங்கே தோன்றுதற்கும், ஒருங்கே நிலைபெறுதற்கும், ஒருங்கே அழிதற்கும், அவற்றின் இனப் பொதுத் தன்மை யும் காலச் சிறப்புமே காரணமாம்.

இவ்வுலகப் பொருள்கள் யாவும் பலவாய்ச், சடமாய், அவயவப் பகுப்புடையனவாய்ச், சுட்டியறியப் படுவன வாய் இருத்தலின், ஓரினப் பொருள்களே என்பதில் ஐய மில்லை. இங்ஙனம் ஓரினப் பொருள்களான இவை, காலச் சிறப்புண்டாம் போது ஒருங்கே அழியவும், மீண்டும் ஒருங்கே தோன்றவும் கூடும். எனவே, இவ்வுலகம் ஒருங்கு நிகழும் தோற்ற ஒடுக்கங்களாகிய தொழில்களைப் பொருந் தும் என முடியும். தோற்ற ஒடுக்கங்கள் உளவாகவே, இவற்றின் இடைப்பட்டதாகிய நிலைத்தற் றொழிலும் உண் டென்பது பெறப்பட்டு, இவ்வுலகம் ஒருசேர முத்தொழிற் படும் என்பது தெளிவாம். இக்கருத்தே, "தோற்றமும் ஈறும் உள்ளதன்பாலே கிடத்தலின்" என ஆசிரியர் மெய்கண்டா ரால் விளக்கப் பெற்றது.

தோற்றம் நிலை இறுதி என்னும் தொழில்களை இவ் வுலகம் ஒருமுறை மட்டும் பெறுமோ, அன்றிப் பலமுறை மீண்டும் மீண்டும் பெறுமோ எனின், பலமுறை பெறும் என்றே கொள்ளுதல் வேண்டும். தோற்றம் நிலை ஒழுக்கம் என்பன உலகின் வடிவ மாறுதல்களேயாம். தோற்றம் என்பது நுண்மை (காரண) நிலையினின்று பருமை (காரிய) நிலையை அடைவதாம். நிலை என்பது நுண்மைக் காரண நிலையினின்று பருமைக் காரிய நிலையில் வளர்ச்சியுறுதல். ஒடுக்கம் என்பது வளர்ச்சியுற்ற காரியநிலையினின்று தளர்ச்சியுற்று அழிந்து, முன்னைக் காரண நிலையை அடைவ தாகும். இத்தோற்ற நிலை இறுதிகள், நிமித்த காரணனாகிய செய்வோன் ஒருவனை இன்றித் தாமே நடைபெறமாட்டா. செய்வோனாகிய வினைமுதலை இன்றித் தாமே நடைபெறுமா யின், அவைகள் தமக்கென ஒருபயனும் நோக்கும் இன்றி வீணே நடைபெறுவனவாகும். ஆதலின், உலகின் தோற் றம் நிலை ஒடுக்கம் ஆகிய முத்தொழில்களுக்கும், ஒரு நிமித்த காரணனாய தலைவன் ஒருவன் இருத்தல் வேண்டும் என்பது திண்ணம். 'செய்வோனை இன்றிச் செய்வினைகள் இல்லை.' எனவே, தலைவன் ஒருவனாற் குறித்ததொரு பயன் கருதியே முத்தொழில்கள் இயற்றப்படுதல் வேண்டும். ஒடுங்கிக் கிடந்த உலகினைத் தோற்றுவித்தவன் எப்பயனைக் கருதித் தோற்றுவித்தானோ, அப்பயன் முற்றுப்பெறும் வரை உலகம் தொழிற்பட்டு நடைபெற்றே தீரும் என்பது

கூறுமலே விளங்கும். உள்ளதாகிய உலகம் கருமமலம் பரிபாகமாதற் பொருட்டு ஒடுங்கி, ஆணவ மலம் பரிபாக மாதற் பொருட்டு மீள உண்டாம்.

அற்றேல், முன்னிருந்த உலகம் அழிந்தொழிய வேறு லகம் தோன்றும் என்னமல், அதுவே ஒடுங்கி நின்று மீள உளதாகும் என்றுரைத்தல் என்னையெனின் – ஒரு பொருள் எவ்வாறு நின்று ஒடுங்கிற்ருே, அவ்வாறே மீளவும் உண் டாதல் முறையான இயற்கை நிகழ்ச்சியாக யாண்டும் காணப்படுகின்றது. அவ்வியற்கை நிகழ்ச்சியின் முறைமை இல்லையாயின், நெல்லானது கழுகாக நீளாமல் நெல்லாகவே தோன்றுவதற்குக் காரணம் பெறப்படாது. மேலும் “உள்ளது போகாது இல்லது வாராது” என்பது அனைவரும் ஒப்பமுடிந்த உண்மையே யாகலின், ஒடுங்கிய பொருள் ஒடுங்கியவாறே மீண்டும் உளதாய் வெளிவரும் என்பது துணியப்படும்.

சடமாகிய இவ்வுலகிற்கு முதற்காரணம் மாயை. மாயையும் உலகமும், வித்தும் முளையும் போல்வனவாகும். வித்துக்கு ஆதாரமாகிய நிலம் குளிர்ந்தவழி, அதன்கண் வித்து நிலைபெற்று, அவ்வித்தினின்று முளை தோன்றுதல் போல – மாயை தனக்கு ஆதாரமாய் நின்று தோற்றுவிக் கும் இறைவனது சத்தியின்கண் உளதாய் நிற்றலால், அச் சத்தி சங்கற்பித்தவழி, அவரவர் வினைக்கீடாக உடல் கருவி உலகு நுகர்ச்சிகளைப் பிறழாமற் பயக்கும் சதுரப்பாடுடைய தாகும். நிலங்குளிர்ந்தவழி அதன்கண் கிடந்தன்றி, வித்து முளையைத் தோற்ருதவாறுபோல, இறைவனது திருவரு ளாற்றலின் கண்கிடந்து, அத்திருவருள் குறிப்பித்தாலன்றி, மாயை உலகினைத் தோற்றுவிக்காது. ஆகலான், மாயை யின் ஒடுங்கித் தோன்றும் உலகம், அதற்கு ஆதாரமாய் நின்ற இறைவனருளின்கண் ஒடுங்கித் தோன்றியதாகவும் கூறப்படும். இது கிழங்கினின்றும் தோன்றிய தாமரை யைச் சேற்றிற் பிறந்தது என்னும் பொருளிற் ‘பங்கயம்’ எனக் கூறுதல்போல்வதொரு வழக்காகும்.

உலகம் முத்தொழில் உடையதாயினும் இல்பொருளே என்பாரது கருத்தும், ஒரு பொருள் ஒடுங்க அதனினின்று பிறிதொரு பொருள்தோன்றி யழிதலே இயல்பு என்பாரது கருத்தும், “இல்லதற்குத் தோற்றம் இன்மையின்”, “உள்ளதற்

தச் செய்வோரை இன்றிச் செய்வினை இன்மையின் " என்னும் ஏதுக்களால் மறுக்கப்பட்டன. இல்பொருளாகிய முயற் கோட்டிற்கு முக்காலத்தும் தோற்றம் இன்மையும், மண் முதலியவற்றின்கண் உளவாகிய குடம் முதலிய பொருள் களுக்குக் குயவன் முதலிய செய்வோரை இன்றிச் செய் தொழில்களாய வனைதல் முதலியன நிகழாமையும், மேற் போந்த உண்மைகளை விளக்குதல் காணலாம். எனவே, பலவாய் அவயவப்பகுப்புடையதாய்ச் சுட்டி யறியப்படும் உலகம், சடப் பொருள்களின் காரியப்பாடாக இருத்த லானும், முத்தொழில்களை யுடைமையானும், செய்வோ ளுகிய இறைவனை முதலாக உடையது என்பது நிறுவப் பெற்றது.

இங்ஙனம், ஒருவனல் தோற்றுவிக்கப்பட்டதே என நிறுவப்பெற்ற உலகமானது, உயிர்க்கு அதனேடு உடன் பிறப்பாகக் கலந்துள்ள ஆணவமலத்தின் ஆற்றல் தேய்ந்து கெடுதற்குரிய செவ்வி அடையும்வரை, மீள மீள உள தாகும். உலகம் முத்தொழில் உடைமையால் அம்முத் தொழிற்குமுரிய மூவரில், முத்தொழிற்கும் உரிமைபூண்ட முழுமுதல்வராக உள்ளவர் சங்காரகாரணரே யாம். அவர் பால் ஒடுங்கியதாகிய உலகம், மீள உளதாகுங்கால் அவ ரிடத்தினின்றே தோன்றுதல்வேண்டும். " யாது யாண்டு ஒடுங்கும், அஃது அதனில் தோன்றும்; மண்ணிற்குடம் போல." இக்கருத்தே " அந்தம் ஆதி " எனச் சூத்திரத்தும், " ஒடுங்கின சங்காரத்தின் அல்லது உற்பத்தி இல்லை " என மேற் கோள் ஏதுவினும் வற்புறுத்தப்பட்டது. சங்கார காரணன் ஒருவனே உலகிற்கு முதற்கடவுள்; ஏனையோர் எல்லாம் புண்ணிய மேம்பாட்டினல் அவ்வவ் வதிகார சத்தியை அடையப்பெற்ற உயிர்களேயாவர்; ஆதலின் அவர்கள் தாமும் அம்முத்தொழில்களுக்கு உட்படுபவர்களே யாவர். " தேவர்கோ அறியாத தேவ தேவன் செழும்பொழில்கள் பயந்துகாத் தழிக்கும் மற்றை மூவர்கோனய் நின்ற முதல்வன்..." எனவரும் திருவாசகமும், உலகிற்கு அந்தத் தைச் செய்யும் சங்காரகாரணனே உலகிற்கு முதற்கடவுள் ஆவான் எனத் தெளிவித்தல் காண்க.

இம்முதற் சூத்திரத்தில் உலகம் முத்தொழிற்படும் என்பதும்; அதனல் உலகம் ஒருவனல் தோற்றப்பட்டதாய

உள்பொருளேயாம் என்பதும்; தோன்றிய உலகம் கரும மலம் பக்குவப் படுதற்பொருட்டு இறைவன்பால் ஒடுங்கிப் பின்னர் ஆணவமலம் பக்குவப்படுதற்பொருட்டு முன்னர் ஒடுங்கியவாறே மீளவும் வெளிப்போந்து உளதாகும் என் பதும்; உலகினை முத்தொழிற்படுத்தும் மும்மூர்த்திகள் உளராயினும், அம்மும்மூர்த்திகளையும் முத்தொழிற்படுத்தி நிற்கும் சர்வ சங்கார காரணனாகிய சிவபெருமான் ஒருவனே உலகிற்கு முதற்கடவுள் என்பதும் விளக்கப் பெற்றன. இச்சூத்திரம் பதியுண்மை வற்புறுத்தியது.

(தொடரும்)

பெருஞ் சொற்றொடர்

ஆசிரியர்

சமய நூல்களில் சில சொற்றொடர்கள் புனிதச் சொற் களாக ஆளப்படுகின்றன. அவை வடமொழியில் மகாவாக் கியம் - பெரும்சொற்றொடர் என்ற பெயரால் வழங்குகின்றன. தமிழ்ச் சமய நூல்களும் அவைகளை ஆளுகின்றபடியால் அவைகளின் தன்மை, பொருள், விரிவு இவைகளை நாம் அறியவேண்டாமா?

அச்சொற்றொடர்கள் வடமொழி வேதங்களில் வந் திருக்கின்றன. அவைகளுக்குப் பல வடமொழி அறிஞர்கள் பலவிதங்களாக உரை வகுத்திருக்கின்றனர். அவ்வுரை களில் கருத்து வேற்றுமைகள் உண்டு. அவ்வேற்றுமைகளை அடிப்படையாகக் கொண்டே சமய பேதங்களும் நமது நாட்டில் தோன்றியிருக்கின்றன. இப்பூசல்களுக்கு எல் லாம் காரணமாயிருக்கிற அச்சொற்றொடர்களை நாம் அறிய வேண்டாமா?

அச் சொற்றொடர்களைப் பிற்காலக் கவிஞர்கள் பலர் தங்கள் பாடல்களில் கூறியும் உள்ளார்கள். எல்லாச் சொற்றொடர்களையும் கூறி விளக்கம் கூறாமற் போனபோதி லும் சில தொடர்களை அங்கங்கே எடுத்தாண்டும் இருக் கிறார்கள். ஆனாலும் அண்மையில் இருந்த சிறந்த கவிஞர் பாம்பன் சுவாமிகள் அவைகள் நான்கையும் கூறி அவை கள் எங்கெங்குள்ளன என்று விரித்துள்ளார்கள். அதனைப் படித்தபோது அதனைப்பற்றி நமது மக்களுக்கு அறிவிக்க

வேண்டும் என்ற விருப்பம் தோன்றிற்று. ஆகவே இக் கட்டுரை எழுதப்படுகின்றது.

வடமொழியில் வேதங்கள் நான்கு. அவை ஒவ்வொன்றும் சங்கிதை, பிரமாணம், உபநிஷத்து என்ற பகுதிகளைக் கொண்டுள்ளன. அவைகளில் உபநிஷத்துக்கள் வேதாந்தங்கள் என்று கூறப்படும். அவ்வுபநிஷத்துக்களில் உள்ள புனித வாக்கியங்கள் நான்கு மகா வாக்கியங்கள் என்னப்படும். அவையாவன :—

1. தத்துவமசி=அது நீயாகிறாய்
2. த்வம்தத்அசி=நீ அது ஆகிறாய்
3. த்வம்பிரம்மாஸி=நீ பிரமன் ஆகிறாய்
4. அஹம்பிரமாஸ்மி=நான் பிரமன் ஆகிறேன்

என்பன. இவைகளின் பொருள் உபநிஷத்துக்களிலேயே விளக்கம் செய்யப்பட்டுள்ளன. இவைகளை விளக்கும் உபநிஷத்து ஒன்று. 'மகா வாக்கியோபநிஷத்து' என்ற பெயராலேயே விளங்குகிறது. ஆனால் அதைக்காட்டிலும் 'பிங்கல உபநிஷத்து' என்ற உபநிஷத்தே விளக்கமாக அவைகளைக் கூறுகிறது.

அந்தப் பிங்கல உபநிஷத்து சுக்கில யசுர் வேதத்தில் உள்ளது. அதின்படி யாக்ஞவல்கியர் என்ற இருடியிடம் பைங்கலர் என்ற மாணவர் 12 ஆண்டுகள் வரை மாணவராக இருந்து பின்னர்ச் சில கேள்விகள் கேட்கிறார். யாக்ஞவல்கியர் அவைகளுக்கு உத்திரம் சொல்லும் வகையில் அந்த உபநிஷத்து தோன்றுகிறது. அதில் 3-ம் அத்யாயத்தில் மகாவாக்கியங்களின் பொருளை விளக்கும்படி மாணவர் கேட்க அவ்வாறு அவற்றை விளக்கி யிருக்கிறார்.

" தத்துவமசி, த்வம்தத்அசி, த்வம்பிரமாஸி, அஹம் பிரமாஸ்மி என்ற நான்கும் மகாவாக்கியங்கள். அவைகளில் தத் என்ற சொல் பிரபஞ்சத்தின் மூலப்பொருளை உணர்த்துகிறது. அது எல்லாம் வல்லது, மாயையைத் தன் வாகனமாகக் கொண்டது, சச்சிதானந்தமாக இருப்பது. மற்றும் 'நான்' என்பதற்கும் அடிப்படையானது. அதுவே 'நீ' என்பதும் ஆகும். 'அது' 'நீ' என்பவைகள் மாயை அவித்யை என்பவைகளின்நின்று பிரிந்த பிறகு; பிரிவினை இல்லாத பிரமத்தின் தன்மை அடை

கின்றன. இங்கே பரமாத்மாவின் வாகனம் ‘மாயை’ என்றும் ஜீவாத்மாவின் வாகனம் ‘அவித்தை’ என்றும் அறியவேண்டும். இவ்வாகனங்களினின்று நீங்கிய பின்னர் உள்ளதே சுதந்திர நிலை ஆகும்.

தத்துவமசி, அஹம்பிரம்மாஸ்மி என்ற சொற்களை அறிவதற்குச் சிரவணம் (கேட்டல்) வேண்டும். அதன் பிறகு, மனனம் (சிந்தித்தல்) வேண்டும். பிறகு நிதித்யாசனம் செய்யவேண்டும். பிறகு சமாதியில் நிற்கவேண்டும். அப்போது ஆன்ம அறிவு ஏற்படும். இவை முதலான பொருள்களை அவர் விரித்துரைத்தார் எனப் பிங்கல உபநிஷத்து கூறுகின்றது.

இனி இந்தச் சொற்றொடர்களைத் தமிழ் நூல்கள் எவ்வாறு கண்டு இருக்கின்றன என்று காண்போம்.

இனி பாம்பன் சுவாமிகள் என்று வழங்குகிற தவத்திரு குமரகுருதாச சுவாமிகள் தாம் இயற்றியுள்ள ‘திருப்பா’ என்னும் நூலில் ‘வண்மை’ என்கிற 49 ஆம் பிரிவில் மகாவாக்கியங்களின் விவரத்தைக் கூறி யிருக்கின்றார்.

முதலில் ‘அகம் பரப்பிரமம்’ என்ற மகாவாக்கியம் இருக்கு வேதத்தில் ஐதரேய உபநிஷத்தில் உள்ளது என்று கூறுகிறார். அச் செய்யுள் :—

“வண்மை இருக்கின் ஐதரேய மாவாக்கியம்அம் பரப்பிரமம்
ஒண்மை ஞானசொரூபம் என்றே உணர்த்த அதற்கோர் முரணுக
வெண்மைஎனும் அஞ்ஞத்துவமும் மேவும் அதுஎன்பதை மறுத்தவ்
வுண்மை உடைஎம் பெருமாற்கன் புறுவார் சரண் எஞ்சிரமேலே”

இரண்டாவதாக “அகம் பிரமாசிமி” என்ற மாவாக்கியம் எசுர் வேதத்தில் பிரகதாரணிய உபநிஷத்தில் உள்ளதென்கிறார். அச் செய்யுள் :—

எசுவின் பிரகதாரணியத்து இசையாம் அகம்பிரமாசி மிக்காம்
உசிதப் பொருள்தே கத்துளநான் ஓங்கு பிரமத் தொடுதோய்ந்து
சுசியுற் றதுவாய் உளனெனவாம் சொலிய விதுவால் உயிர் முத்தன்
நன்னிலையாம் எனவோர்ந்தந் நிமலற் கருது வார்உரியோர்

மூன்றாவது, ‘தத்துவமசி’ என்ற மாவாக்கியம் சாம வேதம் சாந்தோக்கிய உபநிஷத்தில் இருக்கிறது. அதற்குச் செய்யுள் :—

சாம சாந்தோக் கியவாக்காந் தத்துவ மசிதனில் பதமூன்
ருமுன்னுள தஃதெனவாகும் இடையில் உளது நீஎன்றும்
சேமக் கடையில் உளவசிதான் சேர்க்கை யாலாகின்றதெயென
ஆமென் றுணர்ந்தஃதாங்குகனுக் காட்பட்டவருக் கரணுமே

நான்காவது 'அயம் ஆன்மாப்பிரமம்' என்ற மாவாக்கியம் அதர்வணவேதம் மாண்டூக்கிய உபநிஷத்தில் உள்ளது என்கிருர். அதற்குச் செய்யுள் :—

அதர்வ மாண்டூக் கியவாக்கே அயம் ஆன்மாப் பிரமம்ஆமால்
அதன்கண் அயமான்மா சீவற்கு அருளும் இந்தப் பரமாகும்
அதுவே பிரமம் எனநல்ல அருத்தம் உணர்ந்தப் பரம்பெருளாம்
முதல்வற் றெழுவார் எவர் அவர்தாம் முன்னித் தொழுநங் கடவுளரே

இனி இந்த நான்கு மகாவாக்கியங்களின் அர்த்த சங்கிரகத்தை விரிக்கின்ருர். அந்தச் செய்யுள் :—

வேத மாவாக் கியநான்கும் விளங்கு முபயான் மாக்களுடைய
பேதம் உணரத் துலக்கிமுதிர் பேறுஞ் சொனவா நனிதேர்ந்துள்
ஏதம் அறுத்த அருணகிரி இதயப் பொருளாய் நிலவெம்மான்
சீத அருளைப் பேணியுய்யுந் தெருண்மேதையர்கட் கரணுமே

என்று விரிக்கின்ருர் சுவாமிகள்.

இனி சைவசித்தாந்தத்தில் இப்பொருளை எவ்வாறுஉரைத்திருக்கக் காண்கிருேம். சிவஞானபோதம் 10-ம் சூத்திரம்,

"அவனே தானே ஆகிய அந்நெறி
ஏகன் ஆகி இறைபணி நிற்க
மலமாயை தன்னொடு வல்வினை இன்றே"

என்று கூறும். இதில் "அவனே தானே ஆகிய அந்நெறி ஏகனுகி" என்ற பகுதியை ஆராய்க.

இதற்குச் சூர்ணி (32) உரைப்பது "அரனுடன் ஒன்ருகி நில்" என்பது ஆகும். இதற்கு உரைத்த மேற்கோள் :—

"நான் அவன் என்று எண்ணினர்க்கு நாடும் உளம் உண்டாதல்
தான்என ஒன்றுஇன்றியே தான் அதுவாய்—நான்என ஒன்று
இல்என்று தானே எனும் அவரைத் தன் அடிவைத்து
இல் என்று தான் ஆம் இறை"

என்பதாம். இதன் பொருள் வெளிப்படை. இரண்டையும் ஒத்திட்டுப் பார்க்க.

மெய்ப்பொருள் நாயனர்

வித்துவான் - வே. பூதலிங்கம்

அரிதரிது மானிடராதலரிது. ஞானமுங் கல்வியும் பொருந்துதல் அதனினும் அரிது. இஃது அறிஞர்கள் கண்டுரைத்த உண்மை. பெறுதற்கரிய மக்கட் பேற்றைப் பெற்ருேம். ஆனல் செயற்கருஞ் செயல்கள் எதுவும் செய்யவுமில்லை, உணரவுமில்லை. விரும்பிய வழிகளில் பொறிகளைப் போக்கி வாணுளை வீணுளாக்கி மறலிக்கு விருந்தாகிருேம். இன்பத்தை நாடியலையும் பொறிகள் சிற்றின்பத்தைப் பருகுகின்றன. மேலும் அவற்றிற்காக நாடியலைகின்றன. உண்மையில் ஆன்ம விருப்பம் பேரின்பம், அழியாவின்பம். எனெனின் எல்லா உயிர்களுமே என்றுமே இன்பத்தில் நிலைக்கத்தான் ஆசைப்படுகின்றன. ஆனல் அதை அடையமுடியவில்லை. மாறுதலான வழிகள், அனுபவிக்கும் இன்பமும் மாறுபாடுடையது. கருத்து மாறுபாடு காரணமாகவே இன்பமும் மாறுபாடுடையதாக இருக்கின்றது.

" ஒருபொழுதும் வாழ்வ தறியார் கருதுப
கோடியு மல்ல பல "

என்ற வள்ளுவர் கூற்று இதனையே விளக்குகின்றது. தாங்கள் விரும்பும் உண்மை இன்பத்தை அடைய உண்மை வழிகளில் நின்றவர்களே உண்மையை - மெய்மையை அடைந்தார்கள். மெய்ப்பொருளைக் கண்டார்கள். அனுபவித்தார்கள். அனுபவிக்கிருர்கள். அனுபவிப்பார்கள். என்றென்றும் அனுபவிப்பார்கள்.

" வைததனை இன்சொல்லாக் கொள்வானும் நெய்பெய்த
சோறென்றுகூழை மதிப்பானும்—ஊறிய
கைப்பதனைக் கட்டி யென்றுண்பானும் இம்மூவர்
மெய்ப்பொருள் கண்டு வாழ்வார் "

என்று மெய்ப்பொருளின் தன்மையை லௌகீகத்தினின்று விளக்குகின்ருர். ஒழுக்க வழிப்பட்ட லௌகீகமே வைதீகமாகப்படுகிறதென்பது நூல்கள் கண்ட முடிவு. துறவறவிய

யில் "மெய்யுணர்தல்" என்ற ஒரு தனியதிகாரத்தையே வகுத்துக் காட்டினர் வள்ளுவர். "பிறப்பு வீடுகளையும் அவற்றின் காரணங்களையும் விபரீத வையங்களானன்றி உண்மையானுணர்தல்" என்றார் பரிமேலழகர். "எப்பொருளெத்தன்மைத் தாயினும் அப்பொருள் மெய்ப்பொருள்" காண்பதறிவு என்று கூறியதும் அதைக் கருதித்தான்.

இனிப் பொய்ப்பொருள் மெய்ப்பொருள்களை மணிவாசகப் பெருமான் அழகுற வர்ணித்திருப்பது நமது சிந்தைக்குரியது, சிந்தனைக்குரியது.

" தனியனேன் பெரும்பிறவிப் பௌவத் தெவ்வத்
 தடந்திரை யாலெற்றுண்டு பற்றொன்றின்றிக்
கனியைநேர் துவர்வாயார் என்னுங்காலாற்
 கலக்குண்டு காமவான் சுறவின்வாய்ப்பட்டு
இனியென்னே யுய்யுமா றென்றென்றெண்ணி
 ஐந்தெழுத்தின் புணைபிடித்துக் கிடக்கின்றேனை
முனைவனே முதலந்த மில்லா மல்லற்
 கரைகாட்டி யாட்கொண்டாய் மூர்க்க னேற்கே "

என்ற பாடல் பொய்ப்பொருள், மெய்ப்பொருள் என்ற இரு பொருள்களையும் செவ்வனே விளக்குகின்றன. பிறவிக் கடல், துன்பவலைகள், பெண்மைச் சூறவளிகள், காமச்சுரு முதலிய பொய்ப்பொருள்களும் (பாசங்களும்) ஐந்தெழுத்துப் புணை "முதலந்தமில்லா மல்லற்கரை" முதலிய பதிப் பொருள்களும் விளக்கப்படுகின்றன. இப்பதிப்பொருள்களே உண்மைப் பொருள்கள். மெய்ப்பொருள்கள். மெய்ப் பொருளே மோக்ஷம். அதுவே வீடுபேறு, பிறவிப் பெரும் பயன். அதைக் கண்டாரே மெய்கண்டார். அதைக் கண்டவரே மெய்ப்பொருள் நாயனர்.

அறுபத்துமூன்று நாயன்மார்களில் மெய்ப்பொருளுடைய ஒருவர். மாயவாழ்வெனுஞ் சோகத்தால் உணங்கினேன். உள்ளமே குளிரும் வண்ணம் பிணங்கிய கோச பாசப் பின்னலைச் சின்னமாக்கி வெற்றிகண்டார் அவர். சிவகதியே பிறவிக்கதியாகக் கொண்டார். சிவவேடமே தவவேடமாகக் கொண்டார். சிவனே தெய்வமெனக் கொண்டார்.

"சிவசிவ என்கிலர் தீவினை யாளர்
சிவசிவ என்றிடத் தீவினை மாளும்
சிவசிவ என்றிடத் தேவரு மாவர்
சிவசிவ என்றிடச் சிவகதி தானே"

என்ற கொள்கையே கொள்கையாகக் கொண்டு விளங்கினார். சேக்கிழார் பெருமான், "மாதொருபாகர் அன்பர் வழிவரு மலாடர் கோமான்" என்ற அடியால் இதை விளக்குகிறார்.

நாயனர் அரசியல் நெறியினின்றார். அறநெறி வழாமற் காத்தார். பகைவரை வெற்றிபெற்றுச் சிங்கவேறாய்த் திகழ்ந்தார். ஒழுக்கத்தினின்றதால் அவர் சிந்தை முற்றவப்பயனால் இறைவனை நாடியது. ஆதலின் அரசியல்நெறியே சிவமணங் கமழ ஆரம்பித்தது. அவர் அரசியலே சிவநேசச் செல்வமாய்த் திகழ்ந்தது. தேடிய மாடும் நீடு செல்வமுந் தில்லை மன்றுள் ஆடிய பெருமான் அன்பர்க்காவன வாகும் என்ற பெருநோக்குக் கொண்டார். இத்தகைய நாயனரைப் போரினல் வெல்லமுடியுமா? தோற்றோடினன். வெற்றி காணும் ஆசை அவனை வலித்திழுத்தது. பொய்த் தவவேடங் கொண்டான் முத்தநாதன்.

"மெய்யெலாம் நீறுபூசி வேணிகள் முடித்துக்கட்டிக்
கையினில் படைகரந்த புத்தகக் கவளிஎந்தி
மைபொதி விளக்கே என்ன மனத்தினுள் கறுப்புவைத்துப்
பொய்த்தவ வேடங்கொண்டு புகுந்தனன் முத்தநாதன்"

இறைவனடியாரானலும் விதியை அனுபவித்துத் தானே யாகவேண்டும். ஊழிற்பெருவலி யாவுள. முத்தநாதனின் பொய்த்தவ வேடத்தால் மயங்கிவிட்டார். "அங்கவர்தந் திருவேடம் ஆலயங்களெல்லாம் அரனெனவே தொழுதிறைஞ்சி யாடிப்பாடி" என்றும், "திங்கள் முடியாரடியாரடியோமென்று திரிந்திடுவர் சிவஞானச் செய்தியுடையோரே" என்றும் கூறும் பெரியோர் வாக்குக்கள் பொய்க்குமா? உண்மையாகவே முத்தநாதனின் வேடத்தில் அவர் இறைவனையே கண்டார். அதனல் மயங்கிவிட்டார்.

தூங்கிக்கொண்டிருந்த நாயனர் எழுப்பப்படுகிறார். "மங்கலம் பெருக மற்றென் வாழ்வு வந்தணைந்தது" என்று

கூறிக்கொண்டே வருகிறார். வரவேற்கிறார். "உங்கள் நாயகனார் முன்னம் உரைத்த ஆகம நுண்ணூல் மண்மேல் எங்குமில்லாத தொன்று கொடுவந்தேன் இயம்ப" என்று தன்னைத்தானே அறிமுகப்படுத்திக் கொள்கிறான் முத்த நாதன். "யான் பெற்ற பேறே பேறு" என்று வரவேற்று உயர்ந்த ஆசனத்திலிருத்துகிறார் மன்னர். திருமகளுக்கு ஒப்பான அரசமாதேவியாரை அந்தப்புரத்திற்கு அனுப்பி விட்டுத் தான் தரையிலிருந்து நூலினுண்மையை உரைக்க வேண்டுகிறார் நாயனார்.

புத்தகக்கட்டை யவிழ்ப்பான்போல் பாவனை செய்து அரசர் தன்னை வணங்கும் அச்சமயத்தில் அரசனைக் குத்திக் கொலை செய்தான் பாதகன். அதைக் கண்ட காவலன் முத்தநாதனைக் கொல்லத் துணிந்தனன். நாயனார் தடுத்து "அவர் நமர்" கொல்லாதே என்று கூறிவிழுந்தார். அவரைத் தாங்கி பேங்கிய தத்தன், "யாதுநான் செய்கேனென்று கேட்க" "எம்பிரானடியார் போகமீதிடை விலக்கா வண்ணம் கொண்டு போய்விடுக" என்று கூறுகின்றார் நாயனார்.

நாயனார் கட்டளைப்படி முத்தநாதனைத் தங்கள் நாட்டி லிருந்து அவன் நாட்டிற்குப் பத்திரமாக அனுப்பிவைத் தனர். வழியில் ஏற்பட்ட எதிர்ப்புக்களை மக்களின் மனக் கொதிப்பை மாற்றி முத்தநாதனை அவன் நாட்டு எல்லையிற் சேர்த்தனர். நாயனாருஞ் செய்தியை அறிந்தார். மகிழ்ந் தார். அவர் உயிரும் உடனின்று அமைதியாகப் பிரிந்தது. பிரியும்போதும் "விதியினாலே பரவிய திருநீற்றன்பு பாது காத்துய்ப்பீர்" என்ற வேண்டுகோள் விடுத்துப் பிரிகின்றது. சிவாகமத்துக்காக உயிர்ந்த பெருமையும் புகழும் சைவ வொழுக்கமாகிய நன்னெறிகளே நன்னெறியாகியமோக்ஷத் தையும் கொடுக்கும் என்பதனைச் சிவபெருமான் காட்சி யளித்துத் தன் திருப்பாதம் சேர்த்தமையும் நன்கு விளக்கு வன. அதனால்தான் நன்னெறிகாத்த நாயனார் என்று மெய்ப் பொருளுயனார் போற்றப்படுகிறார். சைவ வுலகின் மங்காத திருவிளக்கு அவர் வரலாறு, ஒழுக்கம் அதை ஞாபகப் படுத்திப் பொன்னேபோல் போற்றுவது சைவ மக்கள் கடமையாகும்.

சித்தாந்த தத்துவ இலக்கணம்*

வேத ஆகமப் பிரமாணங்களைக் கொண்டு நிறுவப்படும் பிரமேயங்களாகிய பதி பசு பாசங்களுக்கு இலக்கணம்:— பசுக்கள் சுதந்திரம் இல்லாதவர்கள் ஆகையினாலும், பாசங்கள் சடமாய் இருக்கையினாலும், முதலில் ஞானசொரூபமாகிய பதிக்கும், இரண்டாவது பசுக்களுக்கும், மூன்றாவது பாசங்களுக்கும் இலக்கணங் கூறுவாம்.

பதி இலக்கணம்

இது சொரூபம், தடத்தம் என்று இரண்டு வகைப்படும்.

சொரூப இலக்கணம்:—முதல் நடு விறுதி இல்லாததாய், தூலசூக்கும சூனியரூபமில்லாததாய், குணங்குறி இல்லாததாய், நின்மலமாய், நித்தியமாய், ஒன்றாய், அசலமாய், அகண்டாகார சச்சிதாநந்தாத்துவய பரிபூரண பரஞ்சோதியாய் விளங்குவது. அப்படி விளங்குவது எதுவோ அதுவே சிவம். அது உண்டென்கிறதற்குத் தன்னுடைய அனுபவமே பிரமாணம்.

தடத்த இலக்கணம்:—சிருட்டி, திதி, சங்காரம், திரோபவம், அனுக்கிரகம் என்னும் ஐந்தொழில்களைச் சத்தியோடு இருந்து பண்ணுவது.

சத்தி:—அக்கினிக்கு உஷ்ணம்போலச் சிவனைப் பிரிவற்றிருக்கும். அது நித்தியமாய், ஒன்றாய், எல்லாவற்றையும் வியாபிக்கிற ரூபமாய், மகிமைரூபமாய், ஐசுவரியரூபமாய், பதார்த்தங்களைப் பார்க்கும் ஞானரூபமாய், தன்மரூபமாய் இருக்கும். இது காரிய பேதத்தினாலே பரை முதலிய பலவிதப்படும். சத்தியினுடைய பேதத்தினாலே சிவனும், சத்தர், உத்தியுத்தர், பிரவிருத்தர் என்று மூன்று விதப்படுவர்.

இதில், சத்தர்: காரியத்தைப்பண்ண உத்தியோகியாமல் அக்காரியம் பண்ணத்தொடங்காமல் இருக்கிற சித்த

---

*திருநெல்வேலி திரு. எஸ். பால்வண்ண முதலியார் (1899) பதிப்பும், சென்னை ரிப்பன் அச்சகப் (1913) பதிப்பும் ஒப்புநோக்கப் பட்டன.—தி. கி. நா.

மந்திரத்துடன் கூடியிருக்கிறவர். இவர் சத்திகலை யற்றிருக்கிறவர், ஆகையால் நிட்களர். இவருக்கு ஞானமாத்திரமே திருமேனி. இவருக்கு இலயர், சாந்தர் என்றும் பெயர்.

உத்தியுந்நர்: பரை, ஆதி, இச்சை, ஞானம், கிரியை என்னும் ஐந்து சத்திகளும் சுத்த மாயையிலே பதிந்த பொழுது உண்டான ஈசானாதி ஐந்து மந்திரங்களைத் திருமேனியாக உடையவர். இவர் பாசகலைகள் இல்லாமற் சத்திகலைகளுடன் கூடியிருக்கையாற் சகள-அகளர். இவருக்குச் சதாசிவர், போகர் என்றும் பெயர்.

பிரவிருத்தர்: காரியங்களைப் பண்ணத் தொடங்கிய சத்தியை யுடையவர். இவர் காரியம் பண்ணுகிறபொழுது கிரியை அதிகமாக வேண்டுகையால் ஞானசக்தி கொஞ்சமாகவும், கிரியாசக்தி அதிகமாகவும் உடையவர். இவர் பாச கலைகளுடன் கூடியிருப்பதாலே சகளர். இவருக்கு ஈசர், அதிகாரர் என்றும் பெயர்.

இந்தப் பதி: சிவம், சத்தி, நாதம், விந்து, சதாசிவம், மகேஸ்வரர், உருத்திரர், விஷ்ணு, பிரமா என்று நிட்களம், சகளாகளம், சகளமாக ஒன்பது விதப்படுவர். சத்திக்கும் விந்துவிற்கும் இல்லாமல், நின்ற எழு மூர்த்திகளுக்கும், சத்தி—விந்து—மனோன்மணி—மகேஸ்வரி — உமை—இலட்சுமி—சரஸ்வதி என்று சத்தியும் எழு விதப்படுவள். காரிய பேதத்தினாலே சத்திபேதமும், சத்திபேதத்தினாலே சிவபேதமும் உண்டாம். இந்தச் சிற்சத்தியே பதிக்குத் தேகம். கரணம், இடமென அறிக.

இப்படி ஒரு கருத்தா உண்டென்பதற்குப் பிரமாணம்: ஆண், பெண் முதலாகிய தேகாதி பிரபஞ்சம் காரியங் கொள்கையால், அது கடாதிகளைப்போல, ஒரு கருத்தாவை உடையது. இந்தக் கருத்தா, மாயை முதலானவை சடமாயிருக்கையினாலும், முத்தாத்துமாக்கள் தாங்களே மோட்சத்தை அடையமாட்டார்கள் ஆகையினாலும், பிரமவிஷ்ணுக்கள் அநித்தியர்கள் ஆகையினாலும், எல்லாமாய் நின்று சங்கரித்துத் திரும்பவும் உண்டாக்குகிறவர் அரன் என்ற பதி. ஆத்துமாக்கள் மலத்தை உடையனவாய் இருப்பதால், அமலனாகிய தான், அவ்வான்மாக்களோடு இரண்டற நின்று, கன்மத்திற்கு ஈடாகத் தனது சமவாயசத்தியினாலே

சுத்தாசுத்த மாயைகளிலே நின்று தனுகரணாதிகளை உண்டாக்குவர்.

இப்படிப்பட்ட கருத்தாவானவர் குலாலர் முதலியவர்களைப் போல, சரீர முதலானவைகளை உடையவராக வேண்டுமோ என்னில், அப்படி வேண்டுவதில்லை. காலம் போல அரூபமாயிருந்து, ஐந்தொழில்களைப் பண்ணுதல் கூடும். அப்படிக்கன்றி, தேகத்தை உடையவராகில், அவருடைய தேகத்தை உண்டாக்கத் தேகியாய் ஒரு கருத்தா வேண்டும். பின் அவருடைய தேகத்தை உண்டாக்கத் தேகியாய் ஒரு கருத்தாவேண்டுமென்னும் அநவத்தைத் தோடம் வரும். ஆகையால், தேகாதிசகல உபாதிகளையும் அற்றவனே ஆதிகருத்தா. சூரியன் விகாரமின்றி யிருந்து, தாமரை அலரவும், ஆம்பல் குவியவும், சேறு இறுகவும், வெண்ணெய் இளகவும் பண்ணுமாறுபோல, அக்கருத்தாவும் நிர்விகாரியா யிருந்து காரியத்திலே உன்முகமாக இருக்கின்ற சத்தியோடே கூடியிருக்கிறதால், சந்நிதி மாத்திரத்தினாலே ஐந்தொழில்கள் பண்ணுவர்.

சந்நர் ஐந்தொழிலிலே பண்ணும் தொழில்: இவர் தீவிர தர சத்திநிபாதத்தை யுடையவர்களை அநுக்கிரகித்துப் பரம மோட்சத்திலே விடுவதும், தீவிர சத்திநிபாதத்தை யுடையவர்களை அபரமுத்தித்தானமாகிய சிவதத்துவத்திலே வைப்பதுஞ் செய்து, சுத்தமாயையைத் தமது சத்தியாற் கலக்கிச் சத்தரூபமாகிய நாதவிந்துக்களையும், அர்த்தரூபமாகிய நாதம் விந்து என்ற பெயர்களையுடைய சிவ தத்துவஞ் சத்திதத்துவங்களையும், இத்தத்துவங்களிலே புவனங்களையும், இந்தப் புவனங்களிலே யிருக்கிற பெயர்களுக்குத் தனுகரணாதிகளையும், விந்துதத்துவத்திலே நின்று சதாசிவ தத்துவத்தையும் உண்டாக்கி, சதாசிவரைச் சதாசிவ தத்துவ நாயகராகப் பண்ணி, அவரை வேறறக் கூடிநின்று ஐந்தொழில்களைப் பண்ணுவர்.

உந்தியுந்தராய சதாசிவர் பண்ணும் தொழில்: சத்தர் அநுக்கிரகித்து மிகுந்திருக்கிற விஞ்ஞானகலரிலே தீவிரதர சத்திநிபாதத்தையுடையவர்களை அநுக்கிரகித்துப் பரமமோட்சத்திலே விடுவதும்; தீவிர சத்திநிபாதத்தை யுடையவர்களை விளக்கி அபரமுத்தராகச் சிவசமானர்களாகவும், அணுசதா

சிவர்களாகவும், வித்தியேஸ்வரர்களாகவும், உருத்திரர்களாகவும் வைப்பதும் ; சத்தால் நாதரூபமாய் வந்த அபர ஞானத்தை ஈசானுதி ஐந்துமுகங்களால் வேதங்களாகவும், பிரணவர் முதலான பேர்களுக்குக் காமிகாதிகளாகவும், பிரித்து அநுக்கிரகிப்பதும் ; சாதாக்கிய தத்துவத்திலே நின்றும் ஈஸ்வர தத்துவத்தையும், அதிலே புவனங்களையும், அந்தப் புவன நாயகரான அனந்தர் முதலான அட்டவித்தியேசுரருக்குத் தனுகரணுதிகளையும் உண்டாக்குவதும் ; இந்த ஈசுர தத்துவதத்திற்கு நாயகராகிய மகேஸ்வரரைப் பண்ணுவதும், இந்தத் தத்துவத்திலே நின்றுஞ் சுத்தவித்தியா தத்துவத்தை யுண்டாக்குவதும், தனுகரணுதிகளை யுண்டாக்குவதும்; சுத்த வித்தையிலிருக்கும் காரணமாகிய சத்தகோடி மந்திரங்களுக்கும், இவ்வெழுகோடி மந்திரங்களுக்கு நாயகிகளாயிருக்கும் பிருகுடி முதலான எழுசத்திகளுக்குந் தனுகரணுதிகளை உண்டாக்குவதுமாகும்.

பிரவிருந்தர் பண்ணும் தொழில் : பிரளயாகலரிலே தீவிர தர சத்திநிபாதத்தை யுடையவர்களை அநுக்கிரகித்துப் பரம மோட்சத்தை அடையப் பண்ணுவதும்; தீவிர சத்திநிபாதத்தை உடையவர்களைச் சருவகன்மங்களையும் போக்கி அதிகாரமலமாத்திரம் நிறுத்தி, உருத்திரர்களாகவும், புவனேசுரர்களாகவும் பண்ணுவதும் ; அசுத்தமாயையைக் கலக்கி மாயை, காலம், நியதி, கலை யென்னுந் தத்துவங்களை யுண்டாக்குவதும், இவைகளிலே புவனங்களை உண்டாக்குவதும்; இந்த நாலு தத்துவங்களிலே இருக்கிறவர்களுக்குத் தனுகரணுதிகளை யுண்டாக்குவதும், ஸ்ரீகண்ட பரமேஸ்வரனை அதிட்டித்துநின்று, கலையிலேநின்றும் பிரகிருதியையும், வித்தையையும், இராகத்தையும் உண்டாக்குவதும் ; இவைகளிலே புவனங்களை யுண்டாக்குவதும், இந்த நாலு தத்துவங்களிலே இருக்கிறவர்களுக்குத் தனுகரணுதிகளை யுண்டாக்குவதும், கலாதிகளின் கூட்டத்திலே புருட தத்துவத்தை யுண்டாக்குவதும், பிரகிருதியைக் கலக்கிக் குணங்களைப்பிரிப்பதும் ; தம்முடைய வலதுபாகம், இடதுபாகம், மார்பென்னும் அங்கங்களிலேயுண்டான பிரமன், விஷ்ணு, நீலருத்திரர் என்னும் மும்மூர்த்திகளையும், ஸ்ரீகண்ட பரமேஸ்வரனல் அடைவிலே, இராசத சாத்துவிக தாமத குணங்களால் அதிட்டிப்பித்துக் குணமுதல் பிருதிவி

பீருன இருபத்துநாலு தத்துவங்களில் சிருட்டி, திதி, சங்கா ரங்களைப் பண்ணுவதும் எனவறிக.

சுத்தாத்துவாவிற்குக் கருத்தா உத்தியுத்தராகிய சதா சிவர், மிச்சிராத்துவாவிற்குக் கருத்தா அனந்தேஸ்வரராகிய பிரவிருத்தர், அசுத்தாத்துவாவிற்குக் கருத்தா உருத்திர மூர்த்தி.

பசு இலக்கணம்

ஆன்மா:—இல்லையென்று சொல்லுகிறதுண்டாகையாற் சூனியமென்பது இன்றி, என்னுடைய தேகமென்று ஞானம் வருகையால் தேகமும் அல்லாமல், இந்திரியங்களை ஒழிந்திருக்கிற சொப்பனவத்தையிலும் அறிகையால் இந் திரியங்களுமல்லாமல், சுழுத்தி துரியந் துரியாதீதங்களிலே அந்தக்கரணங்களும் பிராணவாயுவும் அற்றிருக்கையால்-அந் தக்கரணங்களுக்கும் பிராணவாயுவிற்கும் அன்னியமாய், விழித்தபோது பண்ணின காரியக்குறைகளைப் பண்ணவும், அறியவுஞ் செய்கையால் க்ஷணிகனும் அல்லாமல், தேகத் திற்கு அப்புறத்திலே இருக்கிற பதார்த்தத்தைக் கிரகிக்கை யால் அணுபரிமாணனும், மத்தியபரிமாணனும் அல்லாமல், தானே ஒன்றையும் அறியமாட்டாமல் இருக்கையால் சுதந் திரனும் அல்லாமல், சுகதுக்கங்கள் பலவகைப்பட்டிருக்கை யால் ஒருத்தனுமல்லாமல், சுகதுக்க பலத்தைப் புசிக்கை யால் அகருத்தாவும் அல்லாமல், நித்தியனுகி, வியாபகனுகி, மலத்தினுலே தடைபட்ட ஞானசொரூபியாய், அனேகனுகி, அகருத்தா வாய், அசுதந்திரனுய் இருக்கிறவன்.

இந்த ஆன்மா அந்தக்கரணங்களுக்கு அன்னியமா யிருந்தாலும், இராசாவும் மந்திரியுங் கூடியிருக்குமாறு போல, அந்தக்கரணங்களுடன் விடயபோக நிமித்தங் கூடிக்கொண்டிருப்பன். மலத்தால் தடைபட்ட ஞான சொரூபியாகையாற் பஞ்சாவத்தையைப் பொருந்தியிருப் பன். இப்படி ஒரு ஆன்மா உண்டென்கிறதற்குப் பிரமாணம்:—தொழிலைப் பொருந்தியிருக்குந் தேகாதிகள் சடமாகையாற் கடாதிகளைப்போலத் தாமே தொழிற்படா. இவைகளைத் தொழிற்படுத்துபவன் எவனெருவனே அவனே ஆன்மா.

ஆன்மாக்களுக்குக் கேவல சகல சுத்தமென்று முறையே ஆணவம், மாயை, சிவசத்திகளால் மூன்று அவத்தைகள் வரும்.

இதிற் கேவலாவத்தை: ஆன்மா தேகாதிகள் ஒன்று மற்று, குணமற்று, தொழிலற்று, போதமற்று, கருத்தாவாகையற்று, மைக்குண்மணிபோல ஆணவமலத்தினலே மூடப்பட்டு, ஓரறிவுமற்று, வியாபியாய் இருக்கும் அவதரம்.

சகலாவத்தை: ஆன்மாபஞ்சகோசபெத்தனகி, அதனலே பரிச்சின்னனகி, கிஞ்சிஞ்ஞனகி, கன்மத்திற்கு ஈடாக நாளுயோனிகளிலுஞ் சஞ்சரித்து, விடயங்களைப் புசிக்கும் அவதரம்.

சுத்தாவத்தை: ஆன்மா இருவினையொப்பும், மலபரிபாகமும், சத்திநிபாதமும் வந்த காலத்திலே குரு கடாட்சத்தினலே மும்மலங்களினின்று நீங்கித் தான் அந்தச் சிவமாக விளங்கும் அவதரம்.

இந்த ஆன்மாக்கள் சகலர், பிரளயாகலர், விஞ்ஞான கலர் என மூன்று விதப்படுவார்கள்.

இதிற் சகலர்: ஞானக்கிரியைகளைத் தடுக்கும் ஆணவ மலம், அது சிறிது நீங்குதல் நிமித்தங் காரியமாகிய கலாதிகள், போகத்தின் பொருட்டுக் கன்மம், ஆகிய மும்மலத்தையும் உடையவர்கள்.

பிரளயாகலர்: ஞானக்கிரியையைத் தடுக்கும் ஆணவ மலத்தை யுடையவர்களாய்க், கன்ம பரிபாகத்தினலே கலாதிகளைத் தங்கள் வசம் பண்ணிக்கொண்டிருக்கிறவர்களாய், மிச்சிராத்துவாவிலே போகத்திற்கேதுவான கன்மத்தை உடையவர்களாய்; இப்படி ஆணவம், கன்மம் என்னும் இரு மல பெத்தர்களாய் இருக்கிறவர்கள்.

விஞ்ஞானகலர்: ஆணவத்தினலே தடைபட்ட ஞானக் கிரியையை உடையவர்களாகையால், இல்லையென்பதற்கு ஒத்த ஞானக்கிரியை உடையவர்களாகி, ஒரு மலத்தோடு கூடி இருக்கிறவர்கள்.

இந்த மூன்றுவகை ஆன்மாக்களும், மாயையினுடைய அடியென்னும் ஆன்மதத்துவம் இருபத்துநான்கிலும், நடு

வென்னும் வித்தியாதத்துவம் ஏழினும், முடிவிலும் இருப்பார்கள். விஞ்ஞானகேவலர்கள் அனுக்கிரகம் பெற்றதற்குப் பிறகு சிவதத்துவங்களிலே இருப்பார்கள்.

பாச இலக்கணம்

பாசங்கள் : ஆணவம், திரோதாயி, சுத்தமாயை, அசுத்தமாயை, கன்மம் என ஐந்தாம். இவைகளுள் ஆணவம் நித்தியமாய், ஒன்ருய், விபுவாய், அநாதியாய், ஆன்மாக்கள் தோறும் ஞானக்கிரியைகளைத் தடுக்கும் எண்ணிறந்த சத்திகளை உடையதாய், செம்பிற்குக் களிம்புபோலச் சகசமாயிருக்கும் மலமாம். இதற்கு நீகாரம், பசுத்துவம், மலம், அஞ்சனம், அவித்தை, மாவிருதி, மூலமென்று கூறப்பெற்ற பல பெயர்கள் உள.

அப்படி ஒரு ஆணவமலம் உண்டென்பதற்குப் பிரமாணம் :—ஆன்மா ஒன்றினலே ஆவரிக்கப்பட்ட சர்வஞ்ஞனுகவேண்டும்! அற்ப அறிவனுகக் காண்கையால் அற்ப அறிவுமில்லாதவன் சிவனைப்போல மலரகிதனுமல்ல; ஆன்மாவிற்கு அற்ப அறிவும் இயல்பல்ல; ஆதலாலும், எல்லார்க்கும் ஒருபடித்தன்றி ஞானம் இருக்கையினுலும், மோட்சத்திலே சர்வஞ்ஞனுகக் கேட்கப்படுகையினுலும், அன்றியும், அசுசியாய்த் துக்கமாயிருக்கிற விடயபோகங்களிலே ஆசை வருவதினுலும், ஆணவம் ஒன்றுண்டென்று சித்தித்தது.

திரோதாயி: இந்த ஆணவஞ் சடமாகையால், இந்த ஆணவ மலத்தினைச் சேட்டிக்குஞ் சத்தி, ஞானசொருபமாகிய ஆதிசத்தியாம். அது பாசதன்மத்தைப் பின் செல்லுகையாற் பாசமென்று உபசாரமாகச் சொல்லப்படும்.

சுத்தமாயை : நித்தியமாய், ஒன்ருய், ஆறத்துவாவையும் வியாபித்திருப்பதாய், சடமாய், சுத்தமாய், சூக்குமை முதலான நாலுவாக்குகளுக்கும், அத்துவாக்களில் மந்திரம், பதம், வன்னம், கலை என்னு நான்கிற்கும், சிவதத்துவ முதலான சுத்ததத்துவங்கள் ஐந்திற்கும், அவைகளிலிருக்கிற முப்பத்துமூன்று புவனங்களுக்கும், அந்தப் புவனங்களில் இருக்கிற விஞ்ஞானகலர்களுக்கும், புவனநாயகரான மந்திர மகேஸ்வரர், மந்திரேஸ்வரர், மந்திரர்கள் என்னும்

அனுசதாசிவர் முதலான பேர்களுக்கும், தனுவாதிகளுக்கு முதற் காரணமாய், சிவனுக்குப் பரிக்கிரகசத்தியாய் இருப்பதாம். இதற்குக் குண்டலினி, குடிலை, மகாமாயை, ஊர்த்துவமாயை, விந்து என்று சொல்லப்பெற்ற பல பெயர்கள் உள.

இப்படி ஒரு சுத்தமாயை உண்டென்பதற்குப் பிரமாணம்: இங்ஙனங் கூறிய காரியங்கள் காரணமின்றி உண்டாகா என்பதேயாம்.

அசுத்தமாயை: நித்தியமாய், ஒன்ருய், தன்னுடைய காரியங்களை வியாபித்திருப்பதாய், அசத்துருபமாய், கன்மத்திற்கு இருப்பிடமாய், அசுத்தமாய், சகலர் பிரளயாகலர் என்னும் இருவகை ஆன்மாக்களுக்கும் பொதுவாய், பிரளயத்திலே தேகாதிகள் அற்றிருக்கிற ஆன்மாக்களுக்குச் சிருட்டிகாலத்திலே கலாதிதத்துவங்கள், தூலசூக்கும தேகம் முதலானவைகள் உண்டாகிறதற்கு இருப்பிடமாய், சிவனுக்குப் பரிக்கிரகசத்தியுமாய் இருப்பதாம். இதற்கு அதோ மாயை, மோகினி முதலிய பல பெயர்கள் உள.

இப்படி ஒரு மாயை உண்டென்பதற்குப் பிரமாணம்: மேற்கூறிய கலாதி காரியங்கள் உபாதானமின்றி உண்டாகா என்பதாம். அது மண் உருண்டையின்றிக் குடமுண்டாகாதது போல.

கன்மஞ் சடமாகையால் ஆன்மாவினிடத்தில் இராது. சுத்தமாயை கன்மத்திற்கு மேற்பட்டிருத்தலால் அக்கன்மம் சுத்தமாயையிலும் இராது. ஆகையால் சங்காரகாலத்தில் அசுத்தமாயையில் இருக்கவேண்டும்.

கன்மம்: மனோவாக்குக் காயங்களாற் பண்ணப்படுவதால் கன்மம் என்றும்; பண்ணின கன்மம் நசித்துப் பலமுண்டாக்கு மட்டும் புவனத்திலும், மருத்தெண்ணெய்வாதனை போலப் புத்தியிலும் தங்கிக், கண்ணுக்குக் காணப்படாதிருக்கையால் அதிட்டம் என்றும்; எல்லாவற்றையுந் தரிக்கையால் தாரகம் என்றும்; புசிக்கப்படுகையாற் போக்கியம் என்றும் சொல்லப்படுவதாய், அத்தியாத்மிகம் முதலான துக்கத்திரயங்களுக்குக் காரணமாய்; ஆன்ம தன்மமும் மாயாகாரியங்களுங் கூடினவிடத்திலே உண்டாகையால் தன்மாதன்ம

சொரூபமாய், பிரளயத்திலே பக்குவப்படுவதாய், சிருட்டி காலத்திலே தேகாதிகளுக்கு ஏதுவாய், சங்காரகாலத்திலே மாயையிலே இருப்பதாய், புசித்தாலொழியத் தொலையாமல் இருப்பதேயாம்.

இது காயிகம், வாசிகம், மானதம் என்று மூன்று வகைப்படும். இதில் காயிகம் : தேவதையைப் பூசித்தல், ஒருத்தனை அடித்தல் ; வாசிகம் : தேவதையைத் தோத்திரித்தல், ஒருத்தனைத் தூஷித்தல் ; மானதம் : தேவதையைத் தியானம் பண்ணுதல், பிறர் உடைமையை எடுத்துக் கொள்ளவேண்டுமென்று சிந்தித்தல், முதலான புண்ணிய பாவங்களாம்.

இந்தக் கன்மம், சாதி ஆயுள் போகங்களைக் கலந்தே பண்ணுவிக்குமதொழிந்து, ஒருவர்க்காயினும் நல்ல ஆயுளும் நல்ல போகமும் நல்ல சாதியுமாகப் பண்ணாது. புண்ணியத்தினாலே பாவமும், பாவத்தினாலே புண்ணியமும் அழியாது. பிராயச்சித்தம் பண்ணினாற் புசியாமற்போய் ஒழியும். அல்லது, புசித்தாலொழியத் தொலையாது. புசிக்குமிடத்தில் இதாகிதங்களால் மேலைக்குக் கட்டுப்படுவதுமாம். மனோ வாக்குக் காயங்களால் உண்டாகையாலும், அனுபவித்துத் தொலைக்கப்படுகையாலும் நாசத்தை உடையது. தொன்று தொட்டு வருகையால் ஆற்றொழுக்குப்போலப் பிரவாக அநாதியாம். இந்தத் தன்மாதன்ம ரூபமான கன்மம்,தனக்கு மூலகாரணமான ஆணவமாயைகளைப்போல, நித்தியமாய்ச் சகசமாயிருக்கும்.

இப்படிக் கன்மம் உண்டென்பதற்குப் பிரமாணம் : இரண்டுபேர் ஒத்த நிலத்திலே கோளாறு சரியாகப் பயிரிட்டிருக்கையில் ஒருத்தனுக்கு விளைகிறதும், மற்றொருத்தனுக்கு விளையாதேபோகிறதும் பிரத்தியட்சத்திற் காண்கிறோம். இதில் யாதொன்று காரணமோ அதுவே கன்மம். அதுவல்லாமலும் ஒருவன் சுவர்க்கத்திலே சுகத்தை அனுபவிக்கிறான், மற்றொருவன் நரகத்திலே துக்கத்தை அனுபவிக்கிறான். இதில் யாதொன்று காரணமோ அது கன்மம் எனவறிக.

ஆன்மா

ஆன்மாக்கள் நித்தியமாய், வியாபகமாய், சேதனமாய், பாசத்தடையுடையவைகளாய், சரீரந்தோறும் வெவ்வேருய், வினைகளைச் செய்து வினைப்பயன்களை அனுபவிப்பவைகளாய், சிற்றறிவும் சிறுதொழிலும் உடையவைகளாய், தங்களுக்கு ஒரு தலைவனை உடையவைகளாய் இருக்கும்.

ஆன்மாக்கள் நல்வினை தீவினையென்னும் இருவினைக்கு ஈடாக, நால்வகைத் தோற்றத்தையும், எழுவகைப் பிறப்பையும் எண்பத்துநான்கு நூருயிரம் யோனி பேதத்தையும் உடையவைகளாய்ப் பிறந்திறந்துழலும்.

நால்வகைத் தோற்றங்களாவன: அண்டசம், சுவேதசம், உற்பிச்சம் சராயுசம் என்பவைகளாம். அவைகளுள், அண்டசம் முட்டையிற் ருேன்றுவன. சுவேதசம் வேர்வையிற் ருேன்றுவன. உற்பிச்சம் வித்து வேர் கிழங்கு முதலியவைகளை மேற்பிளந்து தோன்றுவன. சராயுசம் கருப்பையிற் ருேன்றுவன. எழுவகைப் பிறப்புக்களாவன: தேவர், மனிதர், விலங்கு, பறவை, ஊர்வன, நீர்வாழ்வன, தாவரம் என்பவைகளாம். தாவரங்களென்றது மரம், செடி, கொடி முதலியவைகளை.

கருப்பையிலே தேவர்களும், மனிதர்களும், நாற்கால் விலங்குகளும் பிறக்கும். முட்டையிலே பறவைகளும், ஊர்வனவும், நீர்வாழ்வனவும் பிறக்கும். வேர்வையிலே கிருமி கீடம் பேன் முதலிய சில ஊர்வனவும், விட்டில் முதலிய சில பறவைகளும் பிறக்கும். வித்தினும் வேர் கொம்பு கொடி கிழங்குகளினும் தாவரங்கள் பிறக்கும். தாவரமென்ருலும், நிலையியற் பொருளென்ருலும், அசரமென்ருலும் பொருந்தும். தாவரமல்லாத மற்றை ஆறு வகைகளும் சங்கமங்களாம். சங்கம மென்ருலும், இயங்கியற்பொருளென்ருலும், சரமென்ருலும் பொருந்தும்.

தேவர்கள் 1100,000 யோனி பேதம். மனிதர்கள் 900,000 யோனி பேதம். நாற்கால் விலங்கு 1000,000 யோனிபேதம். பறவை 1000,000 யோனி பேதம். நீர்வாழ்வன 1000,000 யோனிபேதம். ஊர்வன 1500000

யோனிபேதம். தாவரம் 1900,000 யோனிபேதம். ஆகத் தொகை 8400,000 யோனி பேதம்.

ஆன்மாக்கள் தாம் எடுத்த சரீரத்துக்கு ஏற்ப மெய், நாக்கு, மூக்கு, கண், செவி என்னும் ஐம்பொறிகளினாலும், சித்தத்தினாலும் அறியும் அறிவின் வகையினாலே ஓரறிவுயிர், ஈரறிவுயிர், மூவறிவுயிர், நாலறிவுயிர், ஐயறிவுயிர், ஆறறிவுயிர் என அறுவகைப்படும். புல்லும் மரமும் முதலியவை பரிசத்தை அறியும் ஓரறிவுயிர்கள். இப்பியும் சங்கும் முதலியவை அதனோடு இரதத்தையும் அறியும் ஈரறிவுயிர்கள். கறையானும் எறும்பும் முதலியவை அவ்விரண்டினோடு கந்தத்தையும் அறியும் மூவறிவுயிர்கள். தும்பியும் வண்டும் முதலியவை அம்மூன்றனோடு உருவத்தையும் அறியும் நாலறிவுயிர்கள். விலங்கும் பறவையும் அந்நான்கனோடு சத்தத்தையும் அறியும் ஐயறிவுயிர்கள். தேவர்களும் மனிதர்களும் அவ்வைந்தனோடு சித்தத்தாலறியும் அறிவுமுடைய ஆறறிவுயிர்கள்.

ஆன்மாக்கள் தாம் பூமியிலே செய்த நல்வினை தீவினையென்னும் இருவகை வினைகளினுள்ளும், நல்வினையின் பயனாகிய இன்பத்தைச் சுவர்க்கத்திலும், தீவினையின் பயனாகிய துன்பத்தை நரகத்திலும், அநுபவிக்கும். அப்படி அநுபவித்துத் தொலைத்து, தொலையாமல் எஞ்சிநின்ற இருவினைகளினாலே திரும்பவும் பூமியில் வந்து பிறந்து, அவைகளின் பயன்களாகிய இன்பதுன்பம் இரண்டையும் அநுபவிக்கும். இப்படியே தமக்கு ஒரு நிலைமை இல்லாத கொள்ளிவட்டமும் காற்றாடியும் போலக் கடவுளுடைய ஆஞ்ஞையினாலே, கருமத்துக்கு ஈடாக மேலே உள்ள சுவர்க்கத்திலும், கீழே உள்ள நரகத்திலும், நடுவே உள்ள பூமியிலும் சுழன்று திரியும்.

இப்படிப் பிறந்திறந்துழலும் ஆன்மாக்கள் தாவர யோனி முதலிய கீழுள்ள யோனிகளெல்லாவற்றினும் பிறந்து பிறந்திளைத்து, புண்ணிய மேலீட்டினாலே மனிதப் பிறப்பிலே வருதல் மிகுந்த அருமையாம். அவ்வருமையை ஆராயுங்காலத்து, கடலைக் கையினாலே நீந்திக் கரையேறுதல் போலும். இத்தன்மையையுடைய மனிதப் பிறப்பை எடுப்பினும், வேதாகமங்கள் வழங்காத மிலேச்ச தேசங்களை

விட்டு, அவை வழங்கும் புண்ணிய தேசத்திலே பிறப்பது மிகுந்த புண்ணியமாம்.

இவ்வருமையாகிய மனிதப் பிறப்பை இறைவன் உண்டாக்கியது, உயிர்க்குயிராகிய கடவுளை மனம் வாக்குக் காயங்களினாலே வழிபட்டு அழிவில்லாத முத்தியின்பத்தைப் பெற்று உய்யும் பொருட்டேயாம். சரீரம் கருப்பையில் அழியினும் அழியும். பத்து மாதத்திற் பிறந்தவுடனே அழியினும் அழியும். பிறந்த பின் சில காலம் வளர்ந்து அழியினும் அழியும். மூன்று வயசுக்குமேற் பதினாறு வயசு வரையிலுள்ள பாலாவத்தையின் அழியினும் அழியும். அதற்குமேல் நாற்பது வயசு வரையிலுள்ள தருணாவத்தையின் அழியினும் அழியும். அதற்கு மேற்பட்ட விருத்தாவத்தையின் அழியினும் அழியும். எப்படியும் இந்தச் சரீரம் நிலையின்றி அழிவது உண்மை. அழியுங்காலமோ தெரியாது. இப்பிறவி தப்பினால் எப்பிறவி வாய்க்குமோ, யாது வருமோ, அதுவும் தெரியாது. ஆதலால், இந்தச் சரீரம் உள்ளபொழுதே இதனது நிலையாமையை அறிந்து பெருங் கருணைக் கடலாகிய கடவுளை வழிபட்டு உய்யவேண்டும்.

திருஞானசம்பந்தரின் செந்தண்மை

புலவர் - முருகவேள், B. O. L.

திருப்புகலூர் என்பது சோழ நாட்டுச் சிவத்தலங்களுள் சிறந்தவொன்று. அங்கே, நல்லோர்கள் தங்கள் தூய மனம்போல அணிந்த திருநீற்றின் ஒளியால், இரவு ஒன்றுமே யன்றி, வண்டுகளும் களங்கமற்று விளங்கும்; சோலைகளில் மணமிக்க மலர்கள் மட்டுமே தேன்பொழிவ தின்றி, நாகணவாய்ப் புட்களின் மணிவாயும் பதிகச் செழுந்தேன் பொழியும்; மலர்ந்து கண்ணீர் அரும்புவன தாமரைப் பூக்களே யன்றி, அண்டர் பெருமான் திருப் பாட்டின் அமுதம் பெருகச் செவிமடுக்கும் தொண்டர் வதன பங்கயமும் துளித்த கண்ணீர் அரும்பும் எனச் சேக்கிழார் புகழ்ந்து பாடியுள்ளார்! திருநாவுக்கரசர் பெருமான் தமது வாழ்நாளின் இறுதியில் “எண்ணுகேன் என் சொல்லி எண்ணுகேனே?” எனத் தொடங்கும் திருத்

தாண்டகம் பாடிச் சிவபிரான் திருவடி எய்திய சிறப்பு மிக்கது அத்தலமேயாம்.

அத்திருப்புகலூர்க் கோயிலினுள்ளே "வர்த்தமானீச்சரம்" என்னும் வேறொரு சிவத்தலமும், ஒரு பகுதியாக இணைந்துள்ளது. அத்தலம், அறுபான் மும்மை நாயன்மார்களுள் ஒருவராகிய முருகநாயனர் என்பவர், முப்போதும் வழிபட்டுவந்த மாட்சிமை வாய்ந்ததாகும். "மூசு வண்டறை கொன்றை முருகன் முப்போதும் செய்முடிமேல், வாசமா மலருடையார் வர்த்தமானீச்சரத்தாரே" எனத் திருஞானசம்பந்தர் பாடியருளுதலால், இவ்வுண்மை செவ்விதின் அறியப்படும்.

"வர்த்தமானீச்சரம்" என்னும் தலத்தின் பெயரமைப் புப்பற்றி, நாம் தெரிந்துகொண்டு மகிழத் தகுந்த குறிப்பு ஒன்றுண்டு! பிற்காலத்தில் தலபுராணங்களைப் பாடியவர்கள் பண்டைய வரலாற்றுண்மைகளைத் தெரிந்துகொள்ளும் கருத்தும் விருப்பமுமின்றித், தம் மனம்போனவாறெல்லாம் புராணங்கள் பாடிவைத்துவிட்டுள்ளனர். நகைச்சுவை விளைக்கவல்ல அவற்றை விளக்கப் பல சான்றுகள் கூறுதல் கூடும். ஆயினும், ஈண்டைக்கு இயைபுடைய ஒன்றே சாலும்! "சங்கைஒன் றின்றியே தேவர் வேண்டச் சமுத்திரத்தின் நஞ்சுண்டு சாவா மூவாச், சிங்கமே உன்னடிக்கே போதுகின்றேன் திருப்புகலூர் மேவிய தேவ தேவே" என வரும் தேவாரப் பாடலின் உண்மைக் கருத்தை யறியாமல், திருநாவுக்கரசரைச் சிவபெருமான் சிங்கத்தின் வடிவங் கொண்டு வந்து விழுங்கிவிட்டார் எனக் கதை புனைந்து, அதனை அங்கே ஒரு சிற்பமாகவும் செதுக்கி வைத்துள்ளனர் எனின், வேறு பிறிது கூறுவது யாதுளது?

இத்தகைய முறையிலேயே "வர்த்தமானீச்சரம்" என்னும் தலத்திற்கும் தலபுராணகாரர்கள், தம் மனஞ் சென்றவாறு விளக்கம் கூறியுள்ளனர். "வர்த்தமானீச்சரத்தார்" எனத் திருஞானசம்பந்தர் வழங்கிய தொடரின் உண்மை யாதாக இருக்கலாம் எனக் கருதியுணர அவர்கள் முயன்றிலர். 'வர்த்தமானம்' என்ற வடசொல்லுக்கு நிகழ்காலம் எனப் பொருள் உள்ளதாகலின், வர்த்தமானீச்சரத்தார் என்பதற்கு நிகழ்காலக் கடவுள் எனத் தாமே ஒருவாறு பொருள் முடிபு துணிந்துகொண்டனர். பின்னர்,

நிகழ்காலத்திற்கும் வர்த்தமானீச்சரத்தார்க்கும் யாது தொடர்பு கற்பிக்கலாம் என அவர்கள் எண்ணியிருத்தல் கூடும்! அதனால், 'நிகழ்காலம் இறந்தகாலம் எதிர்காலம் என்னும் மூன்று காலங்களாகவும் இறைவன் விளங்குகின்றான்' என ஏதோ ஓர் இயைபு படைத்துக் கொண்டனர். அதற்குப் பொருந்தும் வகையில் திருஞானசம்பந்தர் பாடிய வர்த்தமானீச்சரரைப் போல, இறந்தகாலக் கடவுள் எதிர்காலக் கடவுள் என்று வேறு இரண்டு கடவுளரையும் திருப்புகலூர்க் கோயிலினுள்ளே ஒவ்வொரு பகுதியில் புதிது படைத்து அமைத்து வைத்தனர். அவற்றிற்குத் தம் கொள்கையின்படி "பூதேஸ்வரர்" "பவிஷ்யேஸ்வரர்" என்னும் பெயர்களையும் புனைந்து வழங்கலாயினர். பூதம் - பவிஷ்யம் - வர்த்தமானம் என்னும் வடசொற்கள் முறையே இறப்பு நிகழ்வு எதிர்வு என்னும் காலங்களைக் குறிப்பனவாகும். ஆதலால், திருப்புகலூரில் முக்காலக் கடவுளரும் ஒருங்கே எழுந்தருளி விளங்குகின்றனர் என அதற்குப் புதுவகைப் பெருமை ஒன்றும் தல புராணகாரர்களால் தேடிவைக்கப்பட்டுள்ளது. "வருகாலம் செல்காலம் ஆயினானை..." "நெருநலையாய் இன்றாகி நாளையாகி நிமிர்புன்சடை யடிகள் நின்றவாறே" என்பன போன்று வரும் சான்றோர் திருமொழிகளைக் கருதிய வழி, இப்புராண விளக்கத்தின்கண் ஏதும் பெருந்தவறில்லையாயினும், ஒரு சிறந்த வரலாற்றுப் பேருண்மை இதன் பயனாக வெளிப்பட வாய்ப்பில்லாமலே போயிற்று!

பிற்காலத் தலபுராணகாரர்கள் தாமாகப் படைத்துக் கொண்டபடி, "வர்த்தமானீச்சரத்தார்" என்பதற்கு நிகழ் காலக் கடவுள் என்பது உண்மைப் பொருளன்று. அப் பொருளில் திருஞானசம்பந்தர் பாடினர் அல்லர் என்பதற்குச் "சாதி கீத வர்த்தமானர் சண்பை நகராரே" என அவர் மீண்டும் பாடியிருப்பதே போதிய சான்றாம். 'திருஞானசம்பந்தர் சமணபுத்த சமயங்களை அறநெறியின் மாணி அருளின்றி அழித்தொழித்துவிட்டார்' என நம்மிற் சிலர் இந்நாளிலு பழித்துரைக்கத் தலைப்பட்டு வருகின்றனர். ஆனால் உண்மை அது வன்று! தமது காலத்தில் இருந்த மக்கள் பலர், "கொல்லாமை மறைந்துறையும்" சமணபுத்த சமயங்களின் போர்வையி னுள் நுழைந்து மறைந்துநின்று, "பெற்றம் புலியின்தோல்

போர்த்து மேய்ந்தாற்" போலச், செய்துகொண்டு வந்த குற்றங்களையே திருஞானசம்பந்தர் கடிந்துரைத்து விலக்கியருளினர். சமண புத்தர்களின் "கொல்லாமை" போன்ற அடிப்படை நல்லறங்களையோ, "தீர்த்தங்கரர்கள்" போன்ற அவர்தம் சான்றோர்களையோ திருஞானசம்பந்தர் யாண்டும் சிறிதும் பழித்திலர். சமண புத்தர்கள் மக்களிடையே பரப்பிவந்த "இடுக்கண் வரும் உரைகளை"க் கேளாதீர்கள் என்றே, தமிழர்களுக்கு விழிப்பூட்டி அறிவுகொளுத்தியுள்ளார் நம் திருஞானசம்பந்தப் பெருமான்! குறுகிய இழிந்த மனப்பான்மை எதுவுமின்றி,விரிந்த பெருந்தன்மையான பரந்த பெருநோக்குடனேயே அவர் நடந்து கொண்டுள்ளார் என்பதனை நடுநிலையாளர் ஆராய்ந்துணரலாம். விட்டுக்கொடுக்கும் பெருந்தன்மை, மாற்றாரின் குற்றங் கடிந்து குணங்களையுவக்கும் பெருந்தகைமை, அனைவரையும் அன்பால் அணைத்து நடத்திச் செல்லும் அருளுடைமை போன்ற உயரிய பல நலங்கள் உடையவராய்த் திருஞானசம்பந்தர் விளங்கியிருந்தார். குற்றம் புரிபவர்களின் குற்றங்களைச் சுட்டிக் கடிந்துரைத்துத் திருத்தி நலஞ்செய்ய முற்பட்டு முயலுதல், பேரருளாளர்கட்குரிய சிறந்த செந்தண்மைப் பண்பேயாகுமன்றி, வன்கண்மை யாகாது! 'சமண் சாக்கிய சமயங்களை ஆக்கியவனும் சிவபெருமானே' என ஒரோவழித் திருஞானசம்பந்தர் அருளிச் செய்துள்ளமை காணலாம். அக்கருத்துப் பற்றியே சமணர்களின் ஞானசிரியராகிய "மகாவீரவர்த்தமானர்" என்னும் பெயரில் வரும் வர்த்தமானர் என்னும் சொல்லையும் சிவபெருமானுக்குரிய பெயர்களுள் ஒன்றாக உவந்து தழீஇக் கொண்டு, "வர்த்தமானீச்சரத்தார்" எனச் சிவபெருமானைத் திருஞானசம்பந்தர் போற்றிப் பணிந்து புகழ்ந்தனராதல் வேண்டும்!

இங்ஙனம் கொள்ளுதலால், நமது சமயாசிரியர்களின் சமரச மனப்பான்மையும், சான்றாண்மைச் செந்தண்மைப் பண்புகளும், பிற சிறப்பும் உலகறிந்துவக்க வெளிப்படும்! எனவே, இத்தகைய பேருண்மைகளைப் பிற கருத்துக்கள் மறைத்துவிடாமல், உலகறியச் செய்து சிவநெறியைப் போற்றி வளர்ப்பதே நம்மனோர் கடமையாகும். "வீண்

பழங்கதைகள் சொல்வதிலோர் மகிமை இல்லை." வாழ்க திருஞானசம்பந்தரின் செந்தண்மை!

மாற்றார்க் குரியவர்ந்த மானர்எனும் சொல்லையுமே
எற்றார், சிவபெருமான் இன்பெயர்போற்—போற்றிமிகச்
செந்தண்மை மிக்க திருஞான சம்பந்தர்!
இந்தவுண்மை தேர்ந்துய்வோம் யாம்!

மதிப்புரை

சைவ சமயம் :—இயற்றியவர் : டாக்டர் – மா. இராசமாணிக்கனார், M. A., L. T., M. O. L., Ph. D., அவர்கள். வெளியீடு : செல்வி பதிப்பகம், காரைக்குடி. விலை 2—4—0.

பெரியபுராணம் வரலாற்றுச் சிறப்புடைய பெருநூல் என்பதனை நாடறியச் செய்து, "சைவ வரலாற்று ஆராய்ச்சிப் பேரறிஞர்" எனத் திகழ்ந்து, சிவநெறிக்கும் செந்தமிழ் மொழிக்கும் அருந்தொண்டாற்றி வரும் பெருஞ் சிறப்பினராய இந்நூலாசிரியர் அவர்கள், விருதுநகரில் நிகழ்ந்த நமது சமாஜ விழாவிலும், வேறு பிற இடங்களிலும் நிகழ்த்திய அரிய பல சொற்பொழிவுகளைத் தொகுத்தமைத்து, இந்நூலின் வாயிலாக நமக்குத் தந்துதவியுள்ளார். இதன்கண், சைவசமயம் பற்றிய அழகிய இனிய சிறந்த பத்துக் கட்டுரைகள் அமைந்துள்ளன. எளிய இனிய தெளிவான நடையில் இயன்றுள்ள இந்நூல், ஆசிரியரின் பெரும்புலமையையும் பேருழைப்பையும் நன்கு விளக்குகின்றது. உருவிற் சிறியதேயாயினும், பொருளாற் பயன்மிக்க புதுவகை நூலாகும் என்பதில் ஐயமில்லை. தெளிவமைந்த வரலாற்று ஆராய்ச்சியறிவையும்,சிறந்துயர்ந்த சமயஉணர்ச்சியையும், கலையுணர்ச்சிகளையு மெல்லாம் ஒருங்கே வளர்த்தளிக்கவல்லதாய்த் திகழும் இவ்வரும்பெறல் நூல், சைவநலஞ் சான்றோர் அனைவராலும் படித்துணர்ந்து பாராட்டப்படுவதற்குரியதாகும்.—முருகவேள்.

திருவெம்பாவை-திருப்பள்ளியெழுச்சி

திரு. ரா. சண்முகசுந்தரம் செட்டியார் எழுதிய உரையும், திரு. ம. பாலசுப்பிரமணிய முதலியார் எழுதிய அணிந்துரையும் கொண்டது. சமாஜப் பொன்விழா வெளியீடுகளுள் ஒன்ருகப் பதிப்பிக்கப்பெற்றது. 176 பக்கங் கொண்டது. விலை ரூபா ஒன்று, ரிஜிஸ்தர் தபாற்கூலி அணு ஒன்பது.

பெரியபுராண மூலம்

சமாஜ மூன்ரும் பதிப்பு, 708 பக்கங்கள், முழு கலிக்கோ பைண்டு, 50 பக்கங்களில் பல தலைப்புக்களில் திரு. ம. பாலசுப்பிரமணிய முதலியார் தொகுத்த அரும் பொருள் ஆராய்ச்சி அகராதி, யாப்புக் குறிப்பட்டவணை, திருமுறை கண்ட புராணம், திருத்தொண்டர் புராண வரலாறு, பாட்டு முதற்குறிப்பகராதி முதலியவற்றுடன் கூடிய கையடக்கமான பதிப்பு. விலை ரூபா மூன்று, ரிஜிஸ்தர் தபாற்கூலி ரூ. 1—2—0.

திருப்போரூர்ச் சந்நிதிமுறை

சமாஜ இரண்டாம் பதிப்பு, ஆராய்ச்சி அகராதி, அரும் பதவுரை, குறிப்பு, பாட்டு முதற்குறிப்பு முதலியவற்றுடன் கூடியது. ராப்பர் பைண்டு விலை அணு பன்னிரண்டு.

முருகன் முந்நூல் விலை அணு 3

பாம்பன்-குமரகுருதாச சுவாமிகள் அருளிய

செவியறிவுறூஉ விலை அணு 3

சிவஞான தீபம் விலை அணு 8

தபாற்கூலி வேறு.

கிடைக்குமிடம் :—

பாரி நிலையம், 59, பிராட்வே, சென்னை-**1**

சைவ சித்தாந்த மகா சமாஜம்,
பொன்விழா மலர்

மிக மிகக் கவர்ச்சியான வெளியீடு. இதில் ஐம்பத்தொரு கட்டுரைகள் உள்ளன. சமாஜத்தின் ஐம்பது ஆண்டுகளின் நிகழ்ச்சிகள் தெளிவாக எழுதப் பெற்றுள்ளன. ஐம்பதாண்டுகளில் நடந்த நிறைவு விழாக்களின் தலைவர்கள்; நடைபெற்ற இடங்கள்; மங்கையர் மாநாடு, இளைஞர் மாநாட்டு விவரங்கள்; சமாஜத் தொண்டர்கள் தொண்ணூற்றொருவர் பற்றிய குறிப்புக்கள்; உயர்திருவாளர்கள்: ஞானியார் சுவாமிகள், மறைமலையடிகள், ஜே.எம். நல்லசாமிப்பிள்ளை, ஸர்.பொன்னம்பலம்இராமநாதன், பொன்விழாத்தலைவர் கனம் சு. நடேசப்பிள்ளை, திரு.வி.க. முதலிய முப்பதின்மர் உருவப்படங்கள்; வேறு பற்பல சிறப்புக்கள் இதில் மிளிர்கின்றன. கட்டுரையாளர்களுள் டாக்டர் அ. சிதம்பரநாதன் செட்டியார், டாக்டர் வ. ஆ. தேவசேனாபதி, தணிகைமணி ராவ்பகதூர் வ. சு. செங்கல்வராயப் பிள்ளை, சிவக்கவிமணி சி. கே. சுப்பிரமணிய முதலியார், சித்தாந்த சிகாமணி க. வச்சிரவேல் முதலியார், சித்தாந்த ரத்னாகரம் முத்து சு. மாணிக்கவாசக முதலியார், திரு. அ. மு. பரமசிவாநந்தம் முதலியோர் உள்ளனர். இருநூற்று நாற்பது பக்கங் கொண்ட அழகிய பதிப்பு.

விலை ரூபா ஒன்று. ரிஜிஸ்தர் தபாற்கூலி அணா பன்னிரண்டு. உடனே முன்பணம் அனுப்பிப் பெற்றுக் கொள்க. வி. பி. மூலம் அனுப்பப்படமாட்டாது.

கிடைக்கும் இடம்:

பாரி நிலையம்,

59, பிராட்வே, சென்னை—1.

Printed at the Sadhu Press, 15, Ganapathi Mudali Street, Royapettah by D. Mangayarkarasi and V. K. Punithavathi Edited by C. M. Ramachandran Chettiar, B.A., B.L., and Published by S.Satchidanandam Pillai, B.A., L.T., for the Saiva Siddhanta Maha Samajam, 10, Monteeth Road, Egmore, Madras-8